சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் —"குறள்"

பிரதி சனிக்கிழமை வெளிவரும்

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு வெளி நாடு மூன்றணு.

மலர் 1 | சென்னை 24—7—1954 சனி | இதழ் 5

சிங்களத் தீவினிலே மாடாய் உழைத்தோம்!... ......திரும்பி வருவதற்கா பாலம் அமைத்தோம்?

அவர்கள் இருவரும் ஒன்றாகக் கூடினர், பேசினர்—பின்னர் ஓர் மகத்தான முடிவுக்கு வந்தனர். கூடி முடிவு கண்ட அந்தத் தோழர்கள் சர்வ சாதாரணமான வர்களல்ல, சிறிசுகளல்ல, சிப்பி ஏந்தி சீரழிந்தவர்களல்ல. இரண்டாவது எலிசபெத் மகாராணிக்கு மலர்ப் பாதை போட்டு மண்டியிட்டு வரவேற்றவர்—ஆசியப் பிரதமர்கள் மகாநாட்டில் 'ஆசிய ஜோதி'யை நையாண்டி செய்தவர்—கொழும்புத் தீவின் கோமான் ஜான் கொத்தலவாலை ஒருவர்; மற்றொருவர் ராமராஜ்யப் பிரதமரின் நெருங்கிய நண்பர்—ஏழரை இலட்ச மக்களின் உன்னதமான பிரதிநிதி—தோழர் சி.சி.தேசாய் அவர்கள். இந்த இருவர்களும் தான் ஒன்றாகக் கூடினர்—ஓர் முடிவுக்கு வந்தனர்.

அந்த முடிவு.......இருபத்தைந்தாயிரம் இலங்கைவாழ் தமிழர்களின் நெஞ்சில் நெருப்பைக் கொட்டிய முடிவு! பிரஜாவுரிமையற்று தத்தளிக்கும் தமிழர்களை நடுக்கடலில் நெட்டித் தள்ளும் துரோக முடிவு! தமிழர்களின் உழைப்பை வேண்டிய மட்டும் உறிஞ்சுக் கொண்டு அவர்களை நாட்டைவிட்டு உதறித் தள்ளும் நன்றிகெட்ட முடிவு! மீண்டும் நினைவு படுத்துகிறோம்.......இந்த முடிவைக் கண்டவர்களுள் ஒருவர் சிங்களத் தீவின் முடிசூடா மன்னர்! மற்றொருவர் பாரதபுத்திரர்களின் சார்பாக இலங்கையிலே அலங்காரக் கொலு வீற்றிருக்கும் தூதுவர்!

முட்புதரை முல்லைக்காடாக்கிய உழைப்பாளிகளை—பாம்புப் புற்றை பூம்பொழில் பூங்காவாக்கிய சீலர்களை—கரம்பு நிலத்தை கரும்புத் தோட்டமாக்கிய தமிழர்களை—இலங்கைத் தீவிலிருந்து வெளியேற்ற, இன்று நேற்றல்ல—நான்கு வருடங்களுக்கு முன்பிருந்தே—குதிரை சவாரி செய்து குழி பறித்து உயிர்விட்ட சேனநாயகா காலத்திலிருந்தே—செய்துவரும் ஓர் சதித் திட்டம்!

தமிழரின் அமைதி வாழ்வுக்கு சாவோலை தீட்டும் நற்பணியில் அவர் ஈடுபட்டிருந்ததை நேரு பண்டிதர் அறிவார்; இலட்சக் கணக்கான திராவிடர்களின் இன்ப வாழ்வை வதைக்க வகை வகையான சட்டங்களை ஏற்படுத்தும் வேலையை அவர் மேற்கொண்டதைப் பற்றி அல்காபாத் பண்டிதர் உணர்வார்; தமிழர்களின் குடியேற்ற முறையால் இலங்கையின் பொருளாதாரம் சீர்கேட்டடைகிறது; அதனால் அரசியலிலும் மாபெரும் கொந்தளிப்பு ஏற்படுகிறது—எனவே, தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற முயற்சிக்கிறோம் என்று, அவர் அன்றே பகிரங்கமாக எடுத்துச் சொன்னதை 'மாந்தருள் மாணிக்கம்' அறிவார்—இருப்பினும் அவர், தமிழர்களுக்கு இழைக்கப்படப் போகும் அநீதியைப்பற்றி—திராவிடர்களுக்குப் புரியப்படப் போகும் கொடுமைகளைப் பற்றி—கிஞ்சித்தேனும் நெஞ்சில் கவலைகொள்ளாமல், குபேர நாடாம்—முதலாளித்துவ முதலைகளின் முக்கிய கூடாரமாம்—போர் வெறியர்களின் சொர்க்க பூமியாம்—டாலர் அமெரிக்காவின் அன்பழைப்பை ஏற்று, அந்த டாலர் மைந்தர்கள் காட்டிய விருந்து மண்டபங்களிலே கலந்து கொண்டு, அமைத்த கேளிக்கைக் கூடங்களிலே கும்மாளமடித்து—இந்தியாவின் நல்லெண்ண உறவை நிலைநாட்டினர்!

உண்மைதான்—ஏக இந்தியாவின் ஒரே பிரதிநிதி—நாற்பது கோடி மக்களின் ஒரே ஒரு தலைவர்—சத்தியசீலர் காந்தியடிகளின் நித்திய சீடர்—நேரு பண்டிதர் தமிழர்களுக்குக் காட்டியுள்ள வஞ்சகமிது! மாற்றாந் தாய் மனப்பான்மையிது!

கடாரம் வென்றவர்களை கள்ளத் தோணியாக்கியபோது—நாடாண்டவர்களை நாடோடிகளென நவின்றபோது—உழைத்த உருவங்களை கூலிக்காரரென்னும் பட்டியலிலே சேர்த்தபோது—நேரு அவர்கள் கவலைப் படவில்லை; மாறாக அமெரிக்காவிலே களிநடன மாடிய மேரி மார்ட்டின் என்னும் ஓர் நடிகையின் இசைக் கலையைப்பற்றி விளக்கம் கூறும் பணியிலே ஈடுபட்டார்! அவருடைய வஞ்சகத்தின் காரணமாகத்தான்—மாற்றாந் தாய் மனப் பான்மையினால்தான்—இன்று, இலங்கை வாழ் தமிழர்கள் உணவின்றி—பிரஜாவுரிமையின்றி—நாடிழந்து மானமிழந்து—கண்ணீர்ப் பொய்கையிலே மூழ்கித்தத்தளிக்கும் நிலைமையை அடைந்திருக்கிறார்கள்!

ஜான் கொத்தலவாலையுடன் நேரு பண்டிதர் 'டில்லி ஒப்பந்தம்' செய்து கொண்டாரே, அப்போதே நாம் சொன்னோம்—அந்த ஒப்பந்தத்தின் மூலம் கொழும்புத் தீவிலே குமுறிக் கொண்டிருக்கும் தமிழர்களைக் காப்பாற்ற முடியாது—கொப்பளிக்கும் கண்ணீரைத் துடைக்க இயலாது—என்று! ஆனால் சிப்பி ஏந்திகளிலிருந்து கோபுரம் ஏறியிருக்கும் கோமான்கள் வரையிலும் நம்மைக் கண்டு சீறினர்; இப்போது, எந்த டில்லி ஒப்பந்தம் எமது நேருவின் இராஜ தந்திரத்தின் பெருமைக்கு ஏற்றதொரு ஏடு என்று சொல்லிவந்தார்களோ, அதே டில்லி ஒப்பந்தத்தை இந்திய அரசாங்கம் கைவிடும் நிலையில் வந்துள்ளது! காரணம் அந்த ஒப்பந்தம் வெறும் காகிதக் குப்பை.......!

அதன் எதிரொலியாகத்தான், நாம் மேலே குறிப்பிட்டுள்ளது போல, இரண்டு 'அரசியல் உருவங்கள்' ஒன்று கூடி, இருபத்தைந்தாயிரம் தமிழர்களை நாடு கடத்தத் திட்டம் தீட்டியிருக்கின்றன!

இந்திய மக்களின் பிரதிநிதியாக—பாரதப் புத்திரர்களின் தூதுவராக—இருக்கும் தேசாய் அவர்களே தமிழரை விரட்டும் தூய்மையான பணியில் ஈடுபட்டிருக்கிறார்! ஜுலை மாதம் 16-ந் தேதியன்று ஜான் கொத்தலவாலையுடன் கூடிப் பேசிய தேசாய், இருபத்தைந்தாயிரம் தமிழர்களை நாடோடிகளாக—நாடற்றவர்களாக—செய்யும் பணியிலே கலந்து, வெட்கக் கேடான முறையில், இலங்கை சர்க்கார் தமிழர்களை வெளியேற்றுவதற்காக விட்ட அறிக்கைக்கு ஆதரவு காட்டியிருக்கிறார்! சொந்த நாட்டானே தன் சொந்தக்காரர்களின் வெந்திருக்கும் நெஞ்சில் ஈட்டி கொண்டு பாய்ச்சுகிற நிலைமை...இந்திய அரசாங்கத்தில்!

ஆனால், மத வெறியின் காரணமாகக் குடும்பங்களை இரத்தக் குட்டையில் மிதக்கவிட்ட வடநாட்டு மக்களுக்கு ஆதரவு காட்டி, அன்பு மொழி பேசி ஆரத் தழுவிய இந்திய அரசாங்கம்...தமிழர்களை மட்டும் நாடற்ற நாடோடிகளாக்குகிறது; அதற்கு ஆதரவு காட்டுவதுபோல, முதன் முதலில் இருபத்தைந்தாயிரம் தமிழர்களை விரட்ட இந்திய அரசாங்கம் அனுமதிதந்திருக்கிறது! அந்த இருபத்தைந்தாயிரம் தமிழர்கள் ... உழைத்து உருக்குலைந்துபோன சோகச்சித்திரங்கள் ... . அவர்களின் நிலை என்ன?

'அன்பன்'

எண்ணம்

கண்ணதாசன்

சமீபத்தில் நடந்த வேலூர் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களில், "திராவிட எழுத்தாளர் சங்கம்" அமைப்பதும் ஒன்று. இந்தத் தீர்மானத்தை செயல்படுத்தக் கூடிய இடமாக தமிழ்ச்சங்கம் கூடிய மதுரையைக்குறிப்பிட்டு அன்று பேசப்பட்டது. சமீபத்தில் மதுரை மாவட்ட மாநாடும் கூட இருக்கிறது. ஆகவே, திராவிட எழுத்தாளர்கள் அனைவரும் இந்த முயற்சியில் ஊக்கங்கொண்டு, நிச்சயமாக எழுத்தாளர் சங்கத்தைத் துவக்கி விடுவது என்று முயன்ருல், பலன் கிட்டாமற் போகாது.

* * *

தென்னட்டிலே "தமிழ் எழுத்தாளர் சங்கம்" என்பதாக ஒன்று இருக்கிறது. ஊரிலே இருக்கிற அக்ரகாரத்துப் 'பெருமக்களை' யெல்லாம் பிடித்துப்போட்டு அவர்களுடைய அனுமந்த நண்பர்களையும், போனல் போகிறது என்று சேர்த்துக் கொண்டு, இந்தச் சங்கம் இயங்கி வருகிறது. தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற பெயரில் இயங்குவதற்கு, இதற்கு போதிய பிரதிநிதித்துவமே இல்லை; எனினும் இது அரசியலாரின் பின்பலத்தால் அடிக்கடி கடமையை விட்டு வெளிவந்து "கொக்கரக்கோ!" பாடிக் கொண்டிருக்கிறது. ஹிந்து ரகுநாதனுக்கும், தினமணி வெங்கடாச்சாரிக்கும், சுதேசமித்திரன் சீனிவாசனுக்கும் இந்த சங்கத்தில் அளவு கடந்த செல்வாக்கு. இந்த எழுத்தாளர் சங்கம் நடத்திய மாநாட்டை எள்ளி நகையாடிய கல்கியார் இப்போது இந்த சங்கச் சாம்பலிற் புரண்டு கொண்டிருக்கிறார். இப்படியாக 'அவா' ளுக்காக வாழும் ஒரு சங்கம் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற பெயரிலே இருக்கிறது. இதன் மூலம் தமிழ் எழுத்தாளர்கள் —அவர்கள் யாராயிருந்தாலும் (பெரும் பத்திரிகைக்காரர்களைத் தவிர) சிறுபயனவது அடைந்துள்ளார்களா என்ருல், பலன் பூஜ்யம்.

* * *

திராவிட எழுத்தாளர் சங்கம் துவக்கப்பட்டால், அதற்கு போதிய அளவு பலன் ஏற்பட்டுவிடும். ஏன், அதற்குமேல், தென்னட்டு எழுத்தாளர்களுக்கே இதுதான் சங்கம் என்னும் நிலை கூட ஏற்பட வழியிருக்கிறது காரணம், தென்னட்டிலே இருக்கிற எழுத்தாளர்களிலே சுடர்விட்டுப் பிரகாசிப்பவர்கள் திராவிடஇயக்க எழுத்தாளர்கள்தான். பாக்கிப்பேரிலே, கல்கி, வரதராசனர் போன்ற அறிமுகமான எழுத்தாளர்களைத் தவிர மற்றப்பேருக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு 'விசிறி'கள் இல்லை. அவர்கள் எழுதிய புத்தகங்கள், "ஆயிரம்அச்சடிக்கப்பட்டது தொள்ளாயிரம் அப்படியே நிற்கிறது" என்கிற பரிதாப நிலையில் இருப்பதைத்தான் காண்கிறோம். உண்மையை வெளிச்சமாகச் சொன்னல் நம்மவர்கள் எழுதும் புத்தகங்களிலே கந்தல் புத்தகங்கூட மூவாயிரம் பிரதி செலவழிகிறது! ஆகவே, 'போதுமான ரசிக பலம்' பெற்ற எழுத்தாளர்களை அதிகமாக கொண்ட திராவிட இயக்கத்துக்கு தம்பி மாதிரி பணிசெய்ய ஒரு எழுத்தாளர் சங்கம் நிச்சயம் தேவை தான்.

* * *

இன்னும் ஒரு காரணம் உண்டு, நமக்கு எழுத்தாளர் சங்கம் தேவை என்பதற்கு. நாம் எழுதி வெளியிட்டிருக்கிறேமே புத்தகங்கள், இவற்றிலே தட்டிப் பிடித்துப் பார்த்தால், நூற்றுக்கு எழுபத்தைந்து தராசுக்கு நிற்பதில்லை. எல்லாம் வெறும் வார்த்தை ஜாலம். நம்முடைய மனதையே இவற்ருல் திருப்திப்படுத்த முடியவில்லை; எதிரிகளை எப்படி வசியப் படுத்தப் போகின்றன? இப்படி நான் சொல்வதனல் யாருக்காவது ஆத்திரம் ஏற்பட்டால் அவர்கள் தயைசெய்து ஒருநாளைக்கு எல்லாப் புத்தகக் கடைகளையும்பார்வையிடட்டும். பணம் கொடுத்து வாங்கினல், துளி பயனுள்ளவை என்று எத்தனை புத்தகங்களைப் பொறுக்கலாம் என்று பார்க்கட்டும்; விஷயம் புரியும். நமது புத்தகங்களை வாங்க வேண்டுமென்னும் ஆசை படைத்தவர்கள், நாட்டில் ஏராளம்; அவர்களைத் திருப்திப் படுத்தினல்தான் நமது லட்சியம் நிறைவேறும் பளபளக்கும் அட்டையல்ல, புத்தகத்தின் கரு, விஷயம் மிக முக்கியம்.

இதற்கும் எழுத்தாளர் சங்கம் பயன்படும்.

இதிலே அண்ணவைத் தலைவராகக்கொண்டு, மனப்பூர்வமாக எல்லோரும் ஆதரிக்கக்கூடிய ஐந்து நீதிபதிகளை நியமித்து, ஒரு நூல் வெளியாவதற்கு முன் இந்தக் குழுவின் சம்மதம் பெற வேண்டும்என்று வைத்தால், மூவாயிரம் பேரல்ல; முப்பதாயிரம்பேர் புத்தகம் வாங்குவார்கள். இது நடக்க முடியாத விஷயமாகத்தான் தெரியும், மேலோட்டமாகப் பார்த்தால். நடக்கமுடியாதென்று பலர் கைவிட்ட பிரச்சினைகளை நடத்தி நிறைவேற்றிக் காட்டியது நமது இயக்கம் என்ற எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு பார்த்தால் இது சுலபமாகிவிடும். நமக்கு இப்போது தேவை ஒன்றுதான்; நாம், நம்மை நன்ருகப் புரிந்துகொண்டு விட்டோம்; எதிரிகள் நம்மைப் புரிந்து கொள்ள வேண்டும்; அவ்வளவுதான்!

* * *

சாதாரணமாக எழுத்தாளன் என்ருலே, தமிழ் நாட்டில் தரித்திரம் பிடித்தவன் என்று பொருள். எழுத்தாளனல், நாடு உருப்பெருகிறதே தவிர, அவனும் அவன் குடும்பமும் வறுமையில்தான் உழலுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எழுத்தே தொழிலாகக் கொண்டு, பத்திரிகையிலும் புத்தகமாகவும் எழுதி நிம்மதியாக முழுவயிறு உண்பவர்கள் என்று பார்த்தால், பார்ப்பனர்களைத் தவிர வேறு ஒரு எழுத்தாளரும் காணப்படமாட்டார்கள்! எழுத்தாளன் வீட்டுக்கதவுக்குள்ளேதான் தரித்திரம் ராஜ நடைபோட்டு நுழைகிறது! இது நமது இயக்க எழுத்தாளர்களுக்கும் புறம்பல்ல. சினிமாவுக்கு எழுதுகிறவர்கள் கொஞ்சம் சீரோடு வாழமுடிகிறது என்பது உண்மைதான். ஆனல், அதிலும், எழுதுகிற இடங்களிலே வாயைத் திறந்து பணம் கேட்காதவர்கள்— 'தரித்திர மாளிகை'யில்தான் தள்ளப்படுகிருர்கள்.

சுருக்கமாகச் சொன்னல், எல்லாவகையான தொழிற்சாதியும் சங்க மூலமாக செயல்படுவதுபோல, எழுத்தாளர்களும் செயல்படுவதில் மிகுந்த நன்மை இருக்கிறது. நாம் 'திராவிட எழுத்தாளர் சங்கம்' ஆரம்பித்தால், நிச்சயமாக அது தமிழ் எழுத்தாளர் சங்கத்தைப்போல் 'பிரபுக்கள் சபை'யாக இராது. பயன் தரத்தக்க தொழிற் சங்கமாக இயங்கும். இந்த முயற்சியை மதுரையில் துவக்கியே தீருவது என்ற கங்கணத்தோடு எழுத்தாள நண்பர்கள் மதுரைக்கு வருவது நல்லது.

விற்பனையாகிறது

★

● தித்திக்கும் தமிழ் நடை

● தெவிட்டாத கதைச் செல்வம்

★

வியாபாரிகளுக்கு 25 சதவிகிதம் கமிஷன்

★

விலை ரூ. 1-0-0

அருணோதயம்

சென்னை-14

அனார்கலி

கண்ணதாசன்

* குவிந்து கிடக்கும் மலர்க்காட்டினுள் கொஞ்ச நேரம் உலவினேன்; விரிந்து கிடக்கும் வானப் பரப்பில் சிறிது நேரம் பறந்து சென்றேன்; அலைபாயும் நீலக் கடலுள் நீந்தியும் வந்தேன்; அசைந்து வரும் தென்றலிலே மிதந்தும் பார்த்தேன்...... அவர்களைக் காணவில்லை!

* அரண்மனையும் அரச போகமும் அறுசுவை உண்டியும் ஆனந்தவாழ்வும் கட்டிப் பிடித்துக் கொண்டு கிடந்த அரசிளங்குமரனை, தன் காந்தள் மலர்க்கைகளால் தழுவிக் கிடந்த நாடோடிக் கன்னியை........'' அனார்கலி! அனார்கலி!'' என்று கூவிக் கூவி அழைத்தேன்; எதிரொலி கேட்டதே தவிர பதில் வரவில்லை.

* தன்னந்தனியளாய், தானே தனக்குத் துணையாய் வாழ்ந்திருந்த ஆட்டக் காரியை, நாடோடியை—அரவணைத்துக் கொண்டிருந்த ராஜவிக்ரகத்தை, ''சலீம்! சலீம்!'' என்று உருகி உருகி அழைத்தேன்; இடுகாட்டு அமைதியே எதிரொலித்தது! பதிலில்லை!

* கால் இடறிக் கீழே விழுந்தேன்; விழுந்த இடம் மேடாக இருந்தது. கைகளால் தடவிக் கொடிகளை விலக்கினேன்; உருச்சிதைந்த எழுத்துக்கள் தோன்றின. ஊன்றிப் படித்தேன்: ''அனார்—சலீம் சமாதி'' என்றிருந்தது.

* கண்ணெதிர் காணும் புவனம் மறைந்தது; அக்பரின் ராஜாங்கத்துக்கு நான் போயிருந்தேன்.... ... .

காட்சி 1

மலர்க் காடு

இசை பாடும் குயில்; நடமாடும் மயில்—இரண்டும் ஓர் உருவில்! உருவம் உன்னதம்; பருவம் பக்குவம்—பெயர் அனார்கலி! வளையாத நெஞ்சம்; புறங்காட்டாப் போர் வீரன்! ராஜாங்கப் பிறப்பேனும் நயமான மனப்பண்பு—பெயர் சலீம்! அதோ......சோலையிலே, அந்தி வேளையிலே......

சலீம்: *(கை மலரில் முகமலர் தாங்கி) மலர் சிரிக்கிறது; மணம் பறக்கிறது; தும்பி இசைக்கிறது; சுவைக்கனி துடிக்கிறது; கருநாக வரவுகண்டு பிறை அஞ்சி நிற்கிறது—உன் முகத்திலே!*

குழந்தைகள் கொஞ்சுகின்றன; குவலயம் சாந்தி பெறுகிறது: தவழ்ந்துவரும் தென்றலென, தனி இன்பம் பிறக்கிறது—உன் அகத்திலே!

அழகியே அனார்கலி! உன்னை அடைந்த பிறகு எனக்கு வெறென்ன வேண்டும், இந்த செகத்திலே!

அனார்: *மகிழ்ச்சி பிறக்கிறது பெரும, உங்கள் மனம் பாடும் கவி கேட்டு! ஆயினும், பயம் பிறக்கிறது கண்ணாளா, வந்துவிட்ட போர் கேட்டு!*

சலீம்: *களம் புகுவோன் காதலிக்கு, அச்சம், களங்கமாகுமே அனார்கலி! நாளைப்பொழுது நமக்கு விடியுமென்று நலிவு நீங்கு! போருக்குச் செல்கிறான் சலீம் என்றாலும், அவன் நெஞ்சத் தேருக்கு நீ தான் சாரதி, என் சித்திரமே!*

அனார்: *பிரிந்திருக்கும் நாளெல்லாம்......*

சலீம்: *பிறவாத நாளாகும்!*

அனார்: *திரும்பி வரும்போது........*

சலீம்: *ஜெயகீதம் பாடுவாய்!*

அனார்: *தவறான செய்தி கேட்டால்.......*

சலீம்: *உன் சமாதி இங்கிருக்கும்!*

அனார்: *தாமதமாய்த் திரும்பி வந்தால்........*

சலீம்: *இந்தத் தேனமுதம் ஊடல் செய்யும்!*

அனார்; *பெரும!*

சலீம்: *பிறையே!*

[''நான்கு பூக்கள், புல்லிதழிற் போய் ஒடுங்கி தமை மறந்து பூரித்து.......]

சலீம்: *படை வரும் ஒலி கேட்கிறது; விடை கொடு அனார்கலி!*

அனார்: *சென்று வருக, என் சிந்தைக் குடியிருப்பே!*

[சலீம் செல்ல, அனார் கண்ணீர்]

காட்சி 2

அனார்கலி இல்லம்

[உல்லாசமாக ஆடிக்கொண்டு ஒரு பாட்டை முணுமுணுத்தவண்ணம் வருகிறாள், அனார்கலி. எதிரே அக்பரின் அமைச்சன் ராஜாமான்சிங் நிற்கிறான். அனார்கலி, திகைத்து ஓரடி பின்வாங்கி]

அனா: *யார்!*

ராஜா: *(கம்பீரமாக) ராஜா மான்சிங்!*

அனா: *(குறும்பாக) ராஜா மான்சிங்! ராஜா மான்சிங்! ஓ... உட்காருங்கள்! அரண்மனையிலிருந்தா? ஏழையின் குடில் புனிதமடைந்து விட்டது.*

ராஜா: *அனார்! இந்த சாம்ராஜ்யத்தையே நீ புனிதப்படுத்த வேண்டும். அதைக் கேட்கத்தான் நான் வந்திருக்கிறேன்!*

பாரதிக்கு மரியாதை!

பாரதி மலர் வருகிறது!

தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

★ தென்றல், வரும் செப்டம்பர் திங்கள் 11-ந்தேதியன்று மகாகவி பாரதிக்கு மரியாதை செய்யுமுகத்தான், 'பாரதி மலர்' வெளியிடுகிறது. விலை அணா 8. திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்கள் பலர் எழுதுகிறார்கள். அழகிய முறையில் மலர் வரும்.

★ பன்னாட்டு அறிஞர்களின் சிறுசிறு நகைச்சுவைத் துணுக்குகளும் சுவைதரும் காதல் இலக்கியமும் தொடர்ந்து தென்றல் இதழில் வெளிவரும்.

★ தோழர் கண்ணதாசன் எழுதும் தொடர்கதை பாரதி மலரிலிருந்து துவங்கும்.

"தென்றல்"

2, சண்முக முதலி தெரு, : : சென்னை—14.

அனு : சாம்ராஜ்யத்தையா! நானு! (சிந்தித்து) ஓ! புரிகிறது; புரிகிறது! பாதுஷா தோட்டத்தில் என் ஆட்டத்தைப் பார்த்தார்; ராஜ நர்த்தகியாக நியமிக்கிறேன் என்ருர். நியமித்து விட்டாரா? அக்பர் பாதுஷாவுக்கு எவ்வளவு நல்ல குணம்! என் ஆட்டத்தால் சாம்ராஜ்யமே புனிதமடையும் என்று நினைக்கிருரே; ஏழை அந்தக் கடமையை ஒழுங்காக நிறைவேற்றுவேன்!

ராஜா : *நிறைவேற்று! அனுர்கலி! எனக்கு ஒரு வாக்குக் கொடு; அதை ஒழுங்காக நிறைவேற்று. டில்லி ராஜ பரம்பரையின் வாழ்வை அது புனிதப்படுத்திவிடும்!*

அனுர் : *வாக்கு? நாடோடிப் பெண்ணிடம்? ராஜா மான்சிங் கேட்கிருர்?*

ராஜா : *ஆமாம் அனுர்கலி! ஆமாம்! அந்த நிலைக்குக் கொண்டு வந்து வைத்துவிட்டாய்.........நீ ஒரு பெரிய தவறு செய்துகொண் டிருக்கிருய்!*

அனுர் : *தவரு?*

ராஜா : *குற்றமுங்கூட! ஆபத்தான இடத்திலே காதல் புரிகிருய்!*

அனுர் : *தோட்டம் ஆபத்தான இடமா?*

ராஜா : *இல்லை. காதலிக்கும் ஆண் மகன்!*

அனுர் : *பாதுஷாவின் சேனையிலே ஒரு சாதாரணப் போர் வீரன்!*

ராஜா : *இல்லை. டில்லி மகுடத்தின் வாரிசு! இளைய சக்கரவர்த்தி சலீம்!*

அனுர் : *இளைய சக்கரவர்த்தி! (திகில்-குழப்பம்) இளைய சக்கரவர்த்தி!*

[அனுர்கலியின் உள்ளம் துடிக்கிறது; முகம் வியர்த்து விட்டது. பளபளக்கும் கூந்தல், புயலில் அலைமோதுகிறது. முகத்திலே கைகளைப் போர்த்திக்கொண்டு.........பயங்கரமாக முகம் மாற, அழுகை வந்து.......]

அனுர் : *அனுர்கலியின் காதலர், இளைய சக்கரவர்த்தி! இல்லை! இருக்க முடியாது! அவர் சிப்பாய்தான்! என் காதலர் பொய் சொல்ல மாட்டார்! அவர் சிப்பாய்தான்!*

ராஜா : *நடிக்காதே! தெரிந்துதான் காதலிக்கிருய். ஒரு நாடோடிப் பெண்ணுக்கு சிப்பாயின் மீது எப்படிக் காதல் பிறக்கும்? வர்ண விளக்குகள் ஒளி வீசும் அரண்மனை; அதன் வளத்துக்கோர் எடுத்துக் காட்டாம் பஞ்சணை; பொன்மணியாரம், பூட்டி மகிழ: முத்துக் குவியல், மூழ்கித் திளைக்க;—அத்தனையும் கட்டி ஆளப் பிறந்த மகன், அக்பர் பாதுஷாவின் ஏகப் புதல்வன், சலீம்! அவனைக் காதலித்தால், ஆளும் அழகன்; அரண்மனை போகமும் கிட்டும் என்றுதான் காதலிக்கிருய், நீ! பொன்னைப் பொருளைப் புகழை விரும்பி சூழ்ச்சி செய்கிருய்! களங்கமிலாப் பரம்பரையைக் கைக்குள் போட்டுக்கொள்ள முயற்சிக்கிருய்! உன்னைக் குற்றம் சாட்டுகிறேன்—நீ ஒரு ராஜத் துரோகி! சலீமைப் பகடைக் காயாக்கி, சாம்ராஜ்யத்தையே சூதாடுகிருய்! உன்னைக் கூண்டிலே நிறுத்தித் தண்டிக்க முடியும், என்னுல்! நல்ல மனம் இருப்பதால் சொல்லுகிறேன்—எவ்வளவு பொன் வேண்டும்? என்னிடம் கேள்—கோடிப் பொன் தேவையா? தருகிறேன்—ஓடிப்போ நாட்டை விட்டு!*

கலையழகின் சக்தி!

வசந்த காலம் வந்தது. ஜனங்களெல்லாம் வெகு உல்லாசமாய்ச் சென்றுகொண்டிருந்தார்கள். மார்பிலே 'குருடனுக்கு உதவுங்கள்' என்ற அட்டையைக் கட்டிக்கொண்டு ஒருவன் நின்ருன். அவனுக்குக் காசு போடுவோர் எவருமில்லை. சற்று எட்ட மற்ெருரு குருடன் நின்ருன் அவனுக்கு ஏராளமான காசு விழுந்தது. அவன் மார்பிலிருந்த சீட்டு கூறியதாவது: 'இது வசந்தம்—நான் குருடன்.'

அனுர் : *(ஆத்திரமாக) அமைச்சரே! அரண்மனை வாயானுலும் அளவோடு பேச வேண்டும். இடிவிழுந்த மனதோடு துடித்துக் கொண்டிருக்கிறேன்; ஏமாற்றப் பட்டோமென்று தவித்துக்கொண் டிருக்கிறேன்—தேள் கொட்டிய இடத்திலே தீ வைக்கிறீர்! சக்கரவர்த்தியின் காதலில் என்ன, தனி இன்பமா? தடம் புரளும் பொன் என்ன, நான் சந்திக்க முடியாதா? மாட கூட மாளிகைகளுக்கு நாட்டிலே பஞ்சமா? வர்ண விளக்குகள் ஒளிவீசும் இடம் அரண்மனை மட்டுந்தானு? பொன் வேண்டுமென்று நான் நினைத்தால்......பிரபுக்களின் மாளிகையிலே ஒரு விளுடி! அடுத்த கணம் டில்லி சாம்ராஜ்யத்தையே விலை பேசுவேன்! ஆனுல்........அமைச்சரே கேளும்! கன்னிப் பருவம் துவங்கியது முதல் நான் கண்டது அவரைத்தான்; காதலித்ததும் அவரைத்தான்; இப்போது கலங்க நேர்ந்ததும் அவரால்தான்! சிப்பாய் என்று நினைத்து, ஏழை மனம் கட்டிய கோட்டை, சக்கரவர்த்தி என்றதும் தவிடுபொடியானது உமக்குத் தெரியுமா?*

ராஜா : *வீண் பேச்சு வேண்டாம்; உன்னை வெறுங்கையோடு அனுப்ப நான் தயாராயில்லை! இதோ பொன்!*

அனுர் : *பொன்! பொன்!*

ராஜா : *லட்சம் வராகன்! இன்னும் கேள்; தருகிறேன்.*

அனுர் : *(கிண்டலாகச் சிரித்து, குனிந்து ஒரு பிடி மண் எடுத்து) காதலை விட்டு நான் கண்காணுமல் ஓடிவிட நீர் கொடுக்கும் விலை, பொன்! உமது கண்மூடித்தனத்துக்கு நான் கொடுக்கும் பரிசு என் பாதம்பட்ட மண்!*

ராஜா : *(ஆத்திரம்) அனுர்!*

அனுர் : *பித்து மனங் கொண்ட பெரியவரே! காதல் என்ருல் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்? அது உயிரோடு பிறந்த உணர்ச்சி! உணர்ச்சி அழிந்தால் உயிர் பிரிந்து போகும்! உமக்குத் தெரியுமா, காதலைப்பற்றி! நீர் வாலிபரா யிருந்ததுண்டா? எந்த மங்கையாவது உம்மைக் காதலித்ததுண்டா? அல்லது பிறக்கும்போதே கிழவராகப் பிறந்தீரா?*

ராஜா : *பேச்சுக்கு நேரமில்லை அனுர்கலி! இப்போது இதைச் செய்! அரச பீடத்தின் எதிர்காலம் ஆபத்திலிருக்கிறது. கடுமையாகவே உத்திரவிடுகிறேன்; ஓடிவிடு நாட்டைவிட்டு!*

அனுர் : *முடியாது! நான் ஏன் ஓடவேண்டும்? என்ன குற்றம் செய்தேன், நான்? காதலிப்பது குற்றமா உங்கள் நாட்டிலே! சரியோ, தவருே, சிப்பாய் என்றுதான் நான் அவரைக் காதலித்தேன். அவர் எனக்கு உத்தரவிடட்டும்—காதலன் உத்தரவுதான் காரிகைக்கு அரசாங்க ஆணை, அமைச்சரே!*

ராஜா : *முடிவாக என்ன சொல்கிருய்?*

அனுர் : *முதலிலே சொன்ன பதில்தான்! முடியாது!*

ராஜா : *கஷ்டப்படப் போகிருய் அனுர்கலி! நடப்பதைப் பொறுத்துப் பார்!*

[என்று ராஜா மான்சிங் சொல்ல,
அனுர்கலியின் கண்ணீர் வெள்ளம்]

—அடுத்த இதழில், அனுர் சலீமைச் சந்திப்பது; அக்பரின் நீதிமன்றம்; சமாதி என முடிவுறும் இது—

தலைகீழ்ப் பாடம்!

நாமெல்லாம் புத்தகத்தை முதலில்இருந்து படிக்கஆரம்பிக்கிருேம் ஆனுல் ஜப்பானியர், கடைசிப் பக்கத்திலிருந்துதான் தொடங்குவார்கள். நமது எழுத்துக்களெல்லாம் ஒன்றுக்கு அடுத்து ஒன்று இருக்கும். ஆனுல் ஜப்பானியரோ ஒன்றன்கீழ் ஒன்ருகத்தான் எழுதுவர். அதோடல்ல; அவர்கள் படிப்பதும் வலது பக்கமிருந்து இடப்பக்கமாகத்தான். அநேகமாக எல்லாமே நமக்கு எதிரிதான். தபால் உறையில் விலாசம் எழுதவேண்டுமானுல், முதலில் ஊர்ப் பெயரை எழுதி விடுவார்கள். கடைசியாகத்தான் ஆளின் பெயர். "போய் வருகிறேன்" என்பதற்கு அவர்கள் காட்டும் சமிக்ஞை 'இங்கே வா' என்பதற்கு நாம் செய்யும் சைகை போல இருக்கும்.

கிளப்பில் புருஷனும் மனையும் சாப்பிட்டால் மனைவிதான் பணம் கொடுப்பது வழக்கம். அவள்தான் பணப்பையை வைத்திருப்பாள். பின்னல், தையல் முதலிய வேலைகளெல்லாம் ஆண்களுக்குத்தான் தெரியும். பெண்கள் நூல் கோப்பதைப் பார்த்தால் மிகவும் வேடிக்கையாக இருக்கும். அவர்கள் ஊசியில் நூலைக் கோக்கமாட்டார்கள்; நூலில்தான் ஊசியைக் கோப்பார்கள்! இதெல்லாம் நமக்குத் தலைகீழ்ப் பாடமாயிருக்கிறது. ஆனுல், ஜப்பானியரைக் கேட்டாலோ?

பத்திரிகைத் தொழில் லாபம்!

அமெரிக்காவைச் சேர்ந்த டெக்ஸாஸில் ஒரு பத்திரிகைப் பிரசுரகர்த்தர், சமீபத்தில் அந்தத் தொழிலை விட்டு விலகிஞர். அப்போது பாங்கியிலே தமது பெயரால் **50,000** டாலர்கள் அவர் போட்டிருந்தார்.

"இவ்வளவு பணம் நீங்கள் எப்படிச் சேர்த்தீர்கள்?" என்று அவரை யாரோ ஒருவர் வினவிஞர்.

அவர் சொன்ஞர்: "பாங்கியிலே **50,000** டாலர்களை எப்படிப் போட்டேன் என்றுதானே கேட்கிறீர்கள்? சொல்லுகிறேன் கேளுங்கள்: **30** வருஷமாய் என் கடமையை மிக ஊக்கமாய்ச் செய்து வந்தேன்; கடுஞ் சிக்கனத்தைக் கடைப்பிடித்தேன்; சதா என் தொழிலிலே மனப்பூர்வமாய் ஈடுபட்டேன்; என் மாமா ஒருவர் சாகும் போது எழுதிவைத்த உயிலில் எனக்கு **49,999½** டாலர்களை இனும் அளித்தார்."

போட்டிப் பரிசு முதலிய சூதுகளையோ, தானதர்மங்களையோ சாராமல் பத்திரிகைத் தொழில் நடத்துவது, பெரும்பாலும் எவ்வளவு 'லாபம்' தரும் என்பதற்கு இந்தக் கதை ஒரு சிறந்த உதாரணமாகும்.

இலக்கியத்தில் காதல்

இந்தப் பகுதி பற்றி ரசிகத் தோழர்கள் பலர் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் "அபாரம்! அற்புதம்!" என்கிருர்கள். மிகச் சிலர், "இது ரொம்ப ஆழமான ஆராய்ச்சி!" என்கிருர்கள். மேலோட்டமான காதல் பற்றியும், உவமை நயம் பற்றியும் பெரும்பாலான பத்திரிகைகள் எழுதிவருகின்றன. ஆனல் ஆழமானதும், அழுத்தமானதுமான விஷயங்களை, இலக்கியத்தில் ரசித்துங்கூட அவற்றை எடுத்துச்சொல்ல அவர்கள் விரும்புவதில்லை. ஆனல், அவற்றைச் சொல்லாமல் விட்ட ஆசிரியர்கள் படித்து ரசிக்காமல் இருந்திருப்பார்களா என்ருல், நிச்சயமாக இல்லை! ரசிக்கும் மனம், எழுத ஏன் துணிவதில்லை என்ருல், இது 'ஓவர்' என்று பொதுமக்கள் கருதிவிடுவார்களோ என்ற பயம். இவர்கள், தன் மனதில் படும் அபிப்பிராயத்தைப் பளிச்சென்று எடுத்து வீசத் திராணியில்லாதவர்கள் என்று நான் சொன்னல், நண்பர்கள் தப்பாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

* * *

நான் எடுத்துத் தரும் விஷயங்கள் ரொம்ப பட்டவர்த்தனமான காதல் விஷயங்களாயிருக்கலாம்; ஆனல் அவை எனது சொந்தச் சரக்குகளல்ல; இலக்கியங்களில் உள்ளவையே. காதலும் அதன் முடிபு எல்லையான காமமும் பிரதியொரு மனிதனும் கையாளுபவை. காதலை வெறுத்த சித்தார்த்தன் கூட அனுபவம் கண்ட பிறகுதான் வெறுத்தான். ஆகவே, சொல்லுகின்ற முறை ஆபாசமற்றதாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர, சொல்லலாமா என்ற கேள்வி இதில் எழுவதற்கு நியாயமே இல்லை,

* * *

"ஏனடா புலவோய் இந்தளை அஸ்திவாரம் போடுகிருய்?" என்று சிலர் கேட்பர். காரணம் இருக்கிறது. இப்போது நான் சொல்லப்போகும் காதல் இலக்கியத்தை சிருஷ்டித்தவன், என் வரையில் தலைசிறந்த கவிஞன்—அபாரமான அனுபவசாலி; ஆனல் சிலருக்கு விரோதி. ஆமாம்; நிகழ்ச்சிகளை அணு அணுவாக ரசிக்கமுடியும் நம்மால்; ஆனல் அணு அணுவாகச் சொல்ல முடியாது. இவன் அதிலே கைகாரன்! சுப்ரதிபக் கவி என்ருல் பொதுவாக எல்லா இலக்கியங்களிலும் ஈடுபாடு உள்ளவர்களுக்கு அவன் "காதலாபுரி மன்னன்" என்பது புரியும். அவன் இயற்றிய விறலி விடு தூது, வாலிபர்களால் வரவேற்கப்பட்டதும், வயோதிகர்களால் வாயாரப் புகழப் பெற்றதும், அரசாங்கத்தாரால் ஆனந்தத்தோடு அனுமதிக்கப்பட்டதுமாகும். (சிற்சில வரிகளை மூலத்திலிருந்து விலக்கிவிட்டு, அரசியலார் இதை அனுமதித்திருக்கிருர்கள்.) அந்த மூல ஏட்டையே தேடிப் பிடித்துப் படித்தேன் நான். ஆனல் அதை இங்கே சொல்லப்போவதில்லை.

* * *

அவதானி ஜடன் என்னும் பார்ப்பனன், ஒரு இளமங்கை (விறலி)யைத் தூது போகும்படி சொல்வது, விறலிவிடு தூதின் பெயர்ச் சாரமாகும். அந்தப் பார்ப்பனன் தன் மனைவியோடு சண்டை போட்டுக் கொண்டு ஊர் ஊராகச் சுற்றி வரும்போது மதுரைக்கும் வந்து சேருகிருன். அங்கே மதனபிஷேகம் என்னும் தாசியைச் சந்தித்து மையல் கொண்டு பொன்னையும் பொருளையும் அவளிடத்திலே கொடுத்துவிட்டு, எண்சாணும் ஒரு சாணாய்க் குறுகி அவ்விடத்திலிருந்து அடித்து விரட்டப்படுகிருன். போகும் வழியில் விசயரங்க சொக்கநாகேந்திரன் என்னும் பாண்டியகுல சேதுபதியைச்சந்தித்துப் பொன்பெற்றுக் கொண்டு ஊர் செல்லுகிருன். விடுசேருமுன் ஒரு 'விறலி'யைச் சந்தித்து, தான்பட்ட அனுபவமெல்லாம் கூறி, தன் மனைவியிடத்தில் சென்று சமாதானப் படுத்தக் கோருகிருன். காவியத்தின் ஆரம்பத்தில் விறலியிடம் கதை கூறுவதாகவே துவங்கி, (Flash Back) பின்னணியில் கதையைக் காட்டுகிருன், கவி. (அப்பொழுதே சினிமா டெக்னிக் கையாளப்பட்டிருக்கிறது என்று நாம் பெருமைப்படுவோமாக!) சகல அந்தரங்கத்தையும் அந்த இளமங்கையிடம் கூறுவதாகக் கவி கற்பித்திருக்கிருன். சிதை

இன்றே பாருங்கள்!

சென்னை காஸினே, பிரபாத், சரஸ்வதி

மற்றும் தமிழ்நாடெங்கும்

கதை: நாமக்கல் கவிஞர்

வசனம்: மு. கருணாநிதி

டைரக்ஷன்: S. M. ஸ்ரீராமுலு நாயுடு

யின் அந்தரங்கஅடையாளங்களை அனுமனிடம் ராமன் சொன்ன தாகவைத்த கம்பனையைக்காட்டிலும் இவன் மோசமல்ல.

* * *

தாய்க் கிழவி ஒருத்தி; அவள் மகள் பெயர் தான் மதனாபிஷேகம்; இந்தத் தாசியைப் படம் பிடித்த கவி, அவளுடைய அம்மா வைத்தான் அருமையான கதா பாத்திரமாக ஆக்கியிருக்கிறான், அடடா! திரையிலே வருகின்ற வில்லிகளெல்லாம் பிச்சை வாங்கவேண்டும்! அவளுடைய சாகசமும், தளுக்கும், பழைய ஞாபகமும், மகளுக்கு அவள் போதிப்பதும், அவதானி, வீட்டுக்குள் நுழையும்போது வரவேற்கும் வரவேற்பும், பிறகு அவன் பணத்தை வகை வகையாகச் சுரண்டுவதும், பணம் தீர்ந்த பிறகு குஸ்தி போடுவதும், சபையிலே போய் ஒப்பாரி வைப்பதும் —ஏகப் பிரமாதம் போங்கள்!

மகள் பருவ மங்கையாகி விட்டாள்; இனித்தான் அவர்கள் வீடு கல கலப்பாக இருக்கப் போகிறது. தாய்க்கு இதிலே ரொம்பப் பெருமை. தன் மகளைப் பக்கத்திலே கூட்டிவைத்து ரொம்ப நேரம் போதனை செய்கிறாள். "அடி பெண்ணே! மானே! என் கண்ணே! மதனாபிஷேகமே! மயிலே! குயிலே! மீன் குஞ்சுக்கு நீச்சும், பாம்புக்குட்டிக்கு நஞ்சும் யாரும் கொடுத்து வரவேண்டியதில்லையே! என் புத்தியில் முக்கால் திட்டமாவது உனக்கும் இருக்கும்; ஆனாலும் நான் சொல்வதைக் கேள். உனக்கு காதலுக்கு—காதல் தொழிலுக்கு—தேவையான பருவம் வந்துவிட்டது. இனி......

..................................மஞ்சள்
மணங்காட்டி ஆள்பிடிக்கும்
வாடைப் பொடியின்
குணங்காட்டிக் கண்காட்டிக்
கோலம்—இணங்கிய பொன்
உத்தரியஞ் சற்றே ஒருபால்
தெரியவிட்டு
குத்துதனச் செம்பொற்
குடங்காட்டி—முத்துநகை
காட்டி, வகைகாட்டி, நகைகாட்டி,
இடைகாட்டி, நயம்
காட்டி, இளையோர்க்காசை
காட்டுவாய்!

அதாவது, மார்பகத்துத் துகிலைக் கொஞ்சம் ஒதுக்கி விட்டுக்கொண்டும், கண்ணையும் இடையையும் காட்டியும் ஆண் சிங்கங்களுக்கு ஆசை காட்டு! நீ கிழவியாகி, தலை பஞ்சு நிறத்தில் மாறிவிட்டால் உன்னிடம் யாரும் வரமாட்டார்கள். பிறகு சட்டிதான் சுரண்டவேண்டும்! அதனாலே இப்பொழுதுதான் சம்பாத்ய காலம்; கொஞ்சம் பணத்திலே குறியாயிரு! என்று நீண்ட யோசனை கூறுகிறாள். "யாராவது 'பெர்மனென்ட்'டாக வைத்துக்கொள்கிறேன் என்றால் இணங்காதே! கணக்குப் போட்டுப் பார்த்தால், அதில் லாபமில்லை. முன்பின் தெரியாதவர்கள் வந்தால் இணங்காதே; காரணம் அதில், நீ தூங்கும்போது சுருட்டிக்கொண்டு ஓடுகிறவர்களும் வந்துவிடுவார்கள். விடிந்த பிறகு நமக்கு விலாசமும் தெரியாது; யாரென்றும் புரியாது; நாம் யாரிடம் போய்க் கேட்பது ஆரணங்கே! —தகப்பன் வருவான்; பின் மகன் வருவான்—இது தப்பான முறை என்று தள்ளாதே. உலகத்தில் இது சகஜம். வருகிறவர்களிடம், "அடசாமி! எனக்கு ஆசையெல்லாம் உன் மேல்தாண்டா! என்ன பொடி போட்டாய் நீ! என்னால் உன்னை விட்டுத் தனியே இருக்க முடியாதுடா!" என்றெல்லாம் 'அளப்பு' நடத்து! 'நீ நிச்சயமாக நாளைக்கு வரவேண்டும்' என்று சத்தியம் வாங்கிக்கொண்டு அனுப்பு! புல்லு விற்றவன் அந்தப் பணத்தைக் கொண்டுவந்தால் வாங்கிக் கொள்; அதை ஒன்றும் மாடு தின்றுவிடாது! கூனற் கிழவன் கொடுக்கும் பணத்தில் நரை ஒன்றும் இருக்காது —அதனாலே தாராளமாக வாங்கிக்கொள். பெண்களை மயக்கிப் பணம் பறிக்கும் எத்தர்கள் வருவார்கள்; அவர்களை நாம் எத்திவிட வேண்டும்! —அதாவது கொஞ்சம் 'ரௌடியிசம்' வேண்டுமடி ரத்தினமே! உதாரணம் சொல்கிறேன் கேள்: மதுரை மழுங்குணி என்று ஒருவன் இருந்தான், நான் குமரியாயிருக்கும்போது! அவன் கிழக்குத் தெருக் கிருஷ்ணை வீட்டை குளப்பறியாகப் பறித்து விட்டான்; சீவில்லிபுத்தூர் தாசியின் சம்பாத்தியம் அத்தனையும் பறித்துக் கொண்டான். தஞ்சாவூர் செல்லியைக் கந்தை பொறுக்க விட்டுவிட்டான். உண்மையைச் சொன்னால், அவனிடம் கொடுத்தவர்கள் உண்டே தவிர வாங்கியவர்கள் கிடையாது. அவன் என்னிடம் வந்தான், அவனைக் கவிழ்த்து, அத்தனை பணத்தையும் பறித்துக் கொண்டு, உடம்பு முழுதும் திருநீறு பூசி அனுப்பி விட்டேன். அவன் இப்போது கையிலுள்ளதெல்லாம் போய், கப்பரை ஏந்தி, தெய்வமே என்று திரிகிறான்!" என்று இன்னும் ஏராளமாக உபதேசிக்கிறாள். (பாட்டின் பொருளையே நான் வசனமாக்கித் தந்திருக்கிறேன்.)

* * *

உபதேசம் பெற்ற மகள் ஊரிலே பெரும் புகழ் பெற்று விட்டாள். வாலிபர்கள், "நான் நேற்றுப் பார்த்தேன்; நான் இன்று சந்தித்தேன்!" என்று பெருமை யடித்துக் கொள்ள ஆரம்பித்தார்கள்; மதுரை நகரில் அந்தத் தாசி, கலைஞர்களையே உற்பத்தி செய்து விட்டாள்! ஒவ்வொருவனும் ஒவ்வொரு புதுமை கூற ஆரம்பித்தான்! ஒருவன் "கண்கள் மட்டும் போதும்" என்பான். இன்னொருவன், அந்த மூக்குதாண்டா பிரமாதம்!" என்பான். மற்றொருவன், "இதழைக் கடித்துத் தின்றுவிட்டேண்டா!" என்பான். இன்னொருவன் கன்னத்தில் ரத்தம் வந்துவிட்டதடா. எனக்கே பாவமாகப் போய்விட்டது!" என்பான். எங்கு பார்த்தாலும், மதனாபிஷேகம் பரப்பிரம்ம சொரூபியாகி விட்டாள்.

ஏராளமான வசதி உள்ள வாலிபர்கள் இப்படி, "போனேன்! போனேன்! பார்த்தேன்! பார்த்தேன்!" என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள். இல்லாதவர்கள் என்ன செய்வது? தூக்கத்திலே கனவு கண்டு மகிழ்வதோடு சரி என்று பரிதாபப் படுகிறான், கவி!! அதிலே சில பேர்.......

..............................முத்து முத்தாய்
பேசினாலும் போதும். பேதை
நம்மைத் தூஷணமாய்
ஏசினாலும் போதும்................

என்று 'தப'ங் கிடந்தார்களாம்!

சிலர், அவள், "இட்ட மருந்தால் இருமல் பிடித்து ஓயாமல் குட்டியிட்ட நாய்போற் குலை"த்தார்களாம்!

ஒருவன், "டேய்! நீ சேலை கொடுத்தாயே, அதற்கு அந்தச் சீமாட்டி என்ன கொடுத்தாள்?" என்று கேட்டாலும், அதற்கு மற்றவன், "சூலை கொடுத்தாளடா!" என்று சோர்ந்தாலும்.

* * *

இப்படி ஊர் அல்லோகல்லோலப் பட்டுக் கொண்டிருக்கும் நேரத்திலே அந்தப் பரிதாபத்திற்குரிய பார்ப்பான் அவதானி ஐயன் மதுரை வந்து சேருகிறான். வந்தவன் வேறு பக்கம் போய்த் தொலையக் கூடாதா? அவள் நாட்டியம் ஆடிய கோயில் மண்டபத்துக்குள்ளேயே வந்து சேருகிறான். வந்தவன் என்ன கண்டான்? என்ன ஆனான்?

.................கொண்டைச்
சொருக்கழகும் முத்துத் தூரயழகுஞ்
செவ்வாய்
முருக்கழகும் சேலை முகப்பின்
—கருக்கழகும்..
வேலழகு போன்ற விழியழகும்
தண்டையிட்ட
காலழகும் பொற்கடகக் கையழகும்
—ஓலையிட்ட
காதழகும் வச்ரமணிக்கச் சிறுக்கு
மார்பழகும்
சோதி முகத்தழகும் துங்கரத்ன
—மாதுரதி
கட்டழகும் பொட்டழகும் கச்சைகட்டி
வந்தகட்டு
வட்டழகுங்கண்டு மயங்கினான்!

மயங்கியே விட்டான் பார்ப்பான்! ஆனால் அவளிடம் போய் எப்படிக் கேட்பது? யாரைத் தூது அனுப்புவது? புரியவில்லை அவனுக்கு. அந்த அப்பாவி ஐயன் தானே தூணாய் கோயில் மண்டபத்திலேயே நிற்கிறான்.

பிறகு அவன் எந்த முறையில் அந்தத் தாசியைச் சந்திக்கிறான்? கவி, அதற்கும் ஒரு 'க்ளைமாக்ஸ்' கொடுக்கிறான். ரொம்ப ரகசியமாகவும் சொல்கிறான். கவி, தானே தாசியாகிறான்; தோழியாகிறான். —ஐயோ! இது போதும் இப்போது—பாக்கியை அடுத்தவாரம் பார்ப்போம்! *

—காரை. முத்துப்புலவர்.

முதல் பார்ஸி கவர்னர்

இந்தியாவுக்கு முதன் முதலாக வந்து குடியேறிய பார்ஸிக்காரர் தோராப்ஜி என்பவர்தான். அவரது மகனான ரஸ்டம்ஜியின் வாழ்க்கை மிகவும் ரஸமானதாகும்.

பிரிட்டிஷாருக்கு அவர் செய்த சேவையின் பயனாய், பம்பாய் கவர்னர் பதவி வகிக்கும் கௌரவம் அவருக்குக் கிடைத்தது. அவர் இருமுறை மணந்தார். இரு மனைவிகளிடத்தும் அவருக்குச் சந்ததி பிறக்கவில்லை. 75 வயதாகி விட்டது. புத்திரப்பேறு அடையும் ஆசையையே அவர் விட்டுவிட்டார்.

இச்சமயம் இரானிலே யிருந்த ஒரு பார்ஸி, அங்கு நிகழ்ந்த மதக் கொடுமை தாங்காமல், பிரோஷா என்ற தமது பதினான்கு வயது மகளுடன் இந்தியாவுக்கு ஓடிவந்தார். அவளுக்கு ஒரு சுயம்வரம் நடந்தது, கோட்டைக்கு அருகே பம்பாய் பார்ஸி புருஷர்களெல்லாம் கூடினார்கள். யாரும் எதிர்பாராதபடி, 75 வயதுக் கிழவரான ரஸ்டம்ஜியை அவள் தேர்ந்தெடுத்துவிட்டாள்.

ரஸ்டம்ஜி குழப்பமடைந்து, உடனே அவ்விடத்தை விட்டு அகன்றார். "வேறு யாரையாவது தேர்ந்தெடு" என்றால், "மாட்டேன்" என்று கண்டிப்பாய் மறுத்துவிட்டாள் பிரோஷா. கடைசியிலே, ரஸ்டம்ஜியையே அவள் மணந்தாள். அழகும் அறிவும் நிறைந்த நான்கு குழந்தைகளை ரஸ்டம்ஜிக்கு அவள் பெற்றுத் தந்தாள்.

ரஸ்டம்ஜி 95 வயதுவரை வாழ்ந்தார். இரண்டு புதல்வருக்குத் தம் கையாலேயே மண முடித்தும் பார்த்தார். பிரோஷா 80 வயது வரை வாழ்ந்து, 1308-ஆம் வருஷம் காலமானாள்.

விற்பனையாகிறது!

தி. மு. க, தலைவர்கள் போட்டோக்கள் வேலூர் தி. மு. கழக மகாநாட்டில் எடுத்த, தலைவர்கள் போஸ்டு கார்டு சைஸ் போட்டோக்கள் 17 கொண்ட செட் 1-க்கு ரூ. 3-0-0. தனி போட்டோ விலை 1-க்கு ரூ. 0-3-0. பெரியார் ஈ.வே.ரா போட்டோவும் உண்டு.

15X12 பெரிய சைஸ் போட்டோ

பெரியார், அண்ணா, கருணாநிதி, கண்ணதாசன்

ஆக நான்கு கொண்ட செட் 1-க்கு ரூ. 5-0-0
தனி போட்டோ 1-க்கு ரூ. 1-8-0

விவரங்களுக்கு :

M. G. **கேசவன்,** (நியூஸ் ஏஜண்டு)
தோட்டப்பாளையம் :: வேலூர் (N.A.)

மாஸ்கோவா? காஞ்சீபுரமா?

எல்லா நாடுகளும் கம்யூனிசத்தை நோக்கியே நடை போடுகின்றன.

உலக நாடுகளில் மூன்றில் ஒரு பகுதி கம்யூனிசத்தைக் கடைப் பிடிக்க தொடங்கி விட்டன.

ஏறத்தாழ எண்பது கோடி மக்கள் வாழும் நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தினர் ஆட்சி செலுத்தும் காட்சியைக் காண்கிறோம்.

அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் காலனி நாடுகளிலெல்லாம் கம்யூனிசத்தின் குரல் வானெட்ட முழங்கக் கேட்கிறது.

முதலாளித்வத்தின் இரும்புப் பிடியில் சிக்கி சீரழிந்து அல்லற்பட்டு அவதியுற்று ஆற்ருது அழுது துடிக்கும் எண்ணற்ற கோடி மக்கள், விழிப்புற்று கிளம்பிவிட்டனர், வீறு கொண்டு எழுந்து விட்டனர் என்ற செய்தி நாள் தவருது நமது செவிகளில் ரீங்காரம் செய்கிறது.

எங்கெங்கு நோக்கினும் உழைத்துஅலுத்து உருக்குலைந்து ஓடாகி ஒரு ஜாண் வயிறும் ஒட்டி உலர்ந்து கிடந்த பாட்டாளி மக்கள், விழித் தெழுந்து இனி நமக்கு விமோசனம் பிறக்கும் என்ற நம்பிக்கையோடு உரிமைக் குரலை எழுப்பி வருகின்றனர்.

பார்க்குமிடமெல்லாம் பாட்டாளி மக்களின் எழுச்சிக் குரல்—பாழ்பட்டு கிடந்த மக்கள் சமுதாயம் தாழ் நிலையைப் போக்கிக் கொள்ள—தக்கதோர் ஆட்சியை அமைத்துக் கொள்ள — தன் மானத்தைக் காத்துக் கொள்ள—முனைந்துவிட்ட செய்தி—புதுமையானது மட்டும் அல்ல புரட்சியானதும் கூட, துன்பத்தை துடைத்துக் கொண்டு இன்பத்தைப் பாய்ச்சும் இனிமையான செய்தி—தித்திக்கும் செய்தி — தேன் சொட்டும் செய்தி.

கம்யூனிசத்தைக் கண்டு கதி கலங்குவோரின் தொகை மிக மிகக் குறைவு; விரல் விட்டு எண்ணி விடலாம். கம்யூனிசமா? ஐயையோ! வேண்டவே வேண்டாம்; இருக்கும் வாழ்வே போதும் இனி ஒரு புது வாழ்வு எனக்கு வேண்டாம் என்று சொல்லக் கூடியவன் எவனும் இருக்க முடியாது இந்த நாளில்.

ஏழையின் இரத்தத்தை இத்தனை நாட்களாக எதிர்ப்பின்றி குடித்து கும்மாளம் போட்டுவந்த ஒரு சில மேட்டுக் குடியினரும் மேல் பூச்சுக் காரர்களும் அவர்களின் மிகப் பெரும் பிரதி நிதிகளாக விளங்கும் முதலாளித்வ திமிங்கிலங்களும் அவர்களுக்கு அப்பனுன டாலர் ஏகாதிபத்தியமும் தான் கம்யூனிசத்தின் எதிரிகளாக காட்சியளிக்கின்றன.

அடியுண்ட நாகம் போல நடு நடுங்கி அபாயக் குரல் எழுப்பி வருகின்றனர். அவர்களோ சிலர், அவர்களுக்கு எதிரணியில் நிற்பவர்களோ மிகப் பலர். இவர்களுக்கெல்லாம் இன்பபுரி கம்யூனிசம்தான்.

கம்யூனிசம் — வாழ்விழந்தவர்களை வாழ்விக்கும் — வன்மை பொருந்திய மாமருந்து. அந்த வார்த்தையைக் கேட்கிற ஏழை சிரிக்கிறுன் அவனது ஒளிபிழந்த முகத்தில் பொலிவு தாண்டவமாடுகிறது. கஷ்டப்படும் பாட்டாளி கேட்டவுடன் களித்து கூத்தாடுகிருனே ஏன்? என்ன இருக்கிறது அந்த வார்த்தையில்.

கூனனை நிமிர்த்தக் கூடிய சக்தி குருடனை விழிபெறச் செய்யும் வல்லமை சோர்ந்து கிடக்கும் மனிதனை சுந்தர புருஷனுக்கும் ஒப்பற்ற திறமை அந்த ஒரு வார்த்தைக்குத்தான் உண்டு. எனவே தான் எல்லா நாடுகளிலும் உள்ள அடக்கப்பட்டு கிடக்கும் மக்களெல்லாம் இந்த கம்யூனிசம் காண விழைகிறுர்கள் விருப்பத்தை தெரிவிக்கிறுர்கள்.

இதை முதலில் உணர்ந்த நாடு சோவியத் பூமி அதைத் தொடர்ந்து செயலாற்றி வரும் நாடு செஞ்சீனு. அந்த இரு நாடுகளும் தந்த புத்தம் புது செய்தியின் எதிரொலி இன்றைக்கு உலக நாடுகள் அனைத்திலும் கேட்கிறது.

காலனி நாடுகளான இந்தோசீனு, மலேயா, பிலிப்பைன்ஸ், கென்யா, டுனீஷியா இன்னும் இது போன்ற நாடுகளிலெல்லாம் நல்வாழ்வு வேண்டும். கம்யூனிசம் வேண்டும் என்பதற்கான வீரம் செறிந்த போராட்டங்கள் நடந்து வருகின்றன.

சிகப்பேறிய நாடுகளின் அடிச்சுவட்டை பின் பற்றி அந்த ஒளி விளக்கின் உன்னத வெளிச்சத்தின் வழியே போலந்து ருமேனியா; பல்கேரியா, அங்கேரி, செக்கோஸ்லோவேக்கியா, அல்பேனியா போன்ற நாடுகள் அடி எடுத்து வைத்து விட்டன,

அந்த பொது உடமை மணங் கமழும் இன்ப புரியை ஒவ்வொரு நாட்டிலும் காண வேண்டும் என்று எண்ணுத முற்போக்கு வாதிகளே கிடையாது. கற்பனை வாதிகள் கதைத்துக் கொண்டு இருக்கும் விண்ணுலக காட்சிகளை மண்ணுலகில் காட்டிய வித்தகனை போற்ருத நாடுகள், நல்லறிவாளர்கள் கிடையாது.

அந்த மாஸ்கோவின் மணம் இந்திய துணைக் கண்டத்திலே தமிழகத்திலே கமழவேண்டுமென்று பாடு பட்டு வருவோர் பற்பலர். தமிழகத்துக்கு பொதுவுடமைதான் சிறந்த வழி என்பது கூறுகிற மொழி வேருக இருக்கலாம். பேசுகிற பாணி புதுமையாகத் தோன்றலாம். ஆனல் முற்போக்கு இயக்கங்களின் உட்கிடக்கை கம்யூனிசம் வேண்டுமென்பதுதான். இது முடிந்த முடிவு; முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட ஒரு பகுதி.

ஆனல் இதை எப்படி நடைமுறைக்கு கொண்டுவருவது என்பதே இங்குள்ள சிக்கலான பிரச்சினை. இதை நிறை வேற்றும் சக்தியும் தைரியமும் கொண்டவர்கள் யார் என்பதும் விவரிக்க முடியாத புதிர்!

தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்து முன்னணியில் திகழ்வன இரண்டு (1) திராவிட முன்னேற்றக் கழகம், (2) கம்யூனிஸ்டு இபக்கம். ஏனைய கட்சிகளை முற்போக்கு இயக்கங்கள் என்றுகருதவும் முடியாது. கருதக் கூடிய வகையில் அந்த இபக்கங்களின் நடவடிக்கைகள் நடைபெற்று வரவும் இல்லை. எனவே தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பாடு படும் ஏழை எளியவர்களுக்கு வாழ்வளிக்கத் தகுத்த இபக்கம், எது என்ற ஐயம் தோன்றுகிற நேரத்திலெல்லாம் நாட்டு மக்களின் கவனத்தை ஈர்ப்பது திராவிட திராவிட முன்னேற்றக் கழகமும் கம்யூனிஸ்ட் கட்சியும் மட்டுமே தமிழ் நாட்டு மக்களின் வாழ்வு மலர வளமை சிறக்க—உழைக்கும் கட்சி, உருவான செயலில் ஈடுபடும் கட்சி பாடு படுவோரின் பங்காளன் என்ற நிலைக்கு உயர்ந்த கட்சி கம்யூனிஸ்ட் இயக்கமா அல்லது தி. மு. கழகமா என்ற சிக்கல் தோன்றக் கூடிய சூழ்நிலை உருவாகின்றது.

கம்யூனிசம் வேண்டும் என்ற எண்ணம் மலர்ந்து எழுச்சியும் வளர்ச்சியும் தோன்றியிருக்கிற இந்நேரத்தில் கம்யூனிஸ்கட்சியின் மீது மக்களின் கவனம் செல்வது இயற்கை. கம்யூனிசம் — கம்யூனிஸ்ட் என்ற வார்த்தைகளுக்கு இடையே அமைந்துள்ள ஒருமைப்பாடு நாட்டு மக்களை கம்யூஸ்ட் இயக்கத்தின் அனுதாபிகளாக வசிகரிப்பது எதிர்பார்க்கக் கூடியதே. கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அதிகார பூர்வமான உறுப்பினர்களாகவும் . அனுதாபிகளாகவும் உள்ள சில ஆயிரக் கணக்கான தோழர்கள் அந்த இயக்கத்தைச் சுற்றி சூழ்ந்துக் கொண்டு சுத்தியல் அறிவாள் கொடியின் கீழ் திரண்டு நிற்பதற்கு இதைத் தவிர வேறு காரணம் எதையும் சொல்ல முடியாது; சொன்னுலும் பொருந்தாது அது மட்டும் அல்ல கம்யூனிஸ்டுகள் சில ஆண்டுகளாக மக்கள் இடையிலே ஏற்பட்டிருக்கிற வறுமை வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய இழிந்த நிலையை பயன்படுத்திக் கொண்டு எழுப்பிவரும் கோஷங்களும் ஒரு காரணம் என்று சொல்லலாம். (தொடரும்)

—வெற்றி வீரன்.



முதற் பேச்சு....

திராவிட சமுதாயத்தின் விடிவெள்ளி ஈரோட்டில் தோன்றியது; கிழக்கு வெளுக்க வெளுக்க விடிவெள்ளி ஒரு கதிரவனைக் காட்டி வந்தது, காஞ்சியிலிருந்து. நாடறியும், நல்லோர் தம் ஏடறியும் அவர் தான் அண்ணு என்று. அறிவின் சிகரம் என மக்களால் புகழப்படும் அண்ணு அவர்களைப் பற்றி ஒரு குறுங் காவியம் எழுத முயற்சித்தேன். வாழ்க்கை வரலாறுகளை எழுதுவதற்கு முயன்றேன். ஆனல் முழு வரலாற்றையும் பெற முடியவில்லை. விரைவில் அம் முயற்சியில் வெல்வேன் என நம்புகிறேன். தென்னுடு வாழ்ந்த காலமும், பின் தாழ்ந்த காலமும் தாழ்வுற்ற காரணமும்—அறிஞர் தம் கழக ஈடுபாடும். அவருக்கு, மற்ற எந்தத் தலைவருக்கும் இல்லாத தனிச் சிறப்புக் கிடைத்தமைக்குக் காரணமும் ஆகிய படப்பிடிப்பாக இதைக் கொண்டு போக விரும்புகிறேன்.

எழுதவேண்டுமென்று பேனுவை எடுக்கும் போதெல்லாம் எண்ணங்கள் குவிந்து வந்து, எதை முன்னுல் சொல்வதென்று புரியாமல் திகைக்க வைத்துக் கொண்டிருந்தன. கடைசியில் ஒரு வழியை வகுத்துக் கொண்டு இதைத் துவங்குகிறேன்.

ஆழாக்கு, கடலை அளந்து விட முயற்சிக்கிறது. முழுவதும் அளந்து கொட்ட முடியாது என்றுலும், அந்த முயற்சியே 'ஆழாக்கு'க்கு ஒரு பெருமை தானே!

—க. தா.

தமிழே!

பிறப்பறியேன்; பெற்றெடுத்தார் பேரறியேன்;
ஆயினும் உன்
சிறப்பறிவேன் அன்னைச் செழுந்தமிழே!
— குறிப்பறியார்
தூற்றினரென்றுலும் துயர் கொள்ளான்
நற்புகழைப்
போற்றிடவென் மன்றிற் பொலி!

* * *

அந்நாள்......

செந்தமிழ் நாட்டின் அந்நாள் வாழ்வை
திராவிட மக்களின் செழு வரலாற்றை
திரும்பிப் பாரீர் சேரமான் வீர
செங்குட்டுவன் வடதேசம் சென்றதும்
அரும்பாவயதுக் குருத்தினைப் போர்க்கு
அனுப்பியதாயின் அருவரலாறும்
கரும்பால் ஆக்கிய கன்னியர்தாமும்
கணவரும் மகிழ்வே வாழ்வாய் நின்றதும்
பொன்னும் மணியும மின்னிப் பொலியும்
பூம்புகார்த் தெருவின் வாணிபக் காட்சியும்
செந்நெல் வயலிற் பொன்னை விளைத்து
தென்னவர் மனையைச் சிங்காரித்ததும்
வன்னெஞ்சினரை வதையுற வீழ்த்தி
வரலாற்றுள்ளே புனிதம் பொறித்ததும்
அண்ணன் தம்பி அக்காள் தங்கை
அம்மா வென்று அன்புறப் பிணைந்ததும்
நாமெலாம் ஒன்று; நம்பெயர் தமிழர்
தேனுலாம் காடு செந்தமிழ் நாடு
நமதே! வாழ்வெலாம் நமதே! என்ன
முரசம் ஒலித்ததும். மூண்ட பகையினற்
கலிங்கம் வென்றதும், கடாரம் கொண்டதும்
இலங்கைத் தீவினைக் கலங்க அடித்ததும்
கரிகாற் சோழர்தம் கண்நிறைக் காட்சியும்
காவிரி நதியின் கரை விளையாட்டும்
பரிசில் பெற்ருேர் பாடல் இசைத்ததும்
பாடல் பெற்ருேர் பரிசில் ஈந்ததும்
வீரம்ஒன்றே விளை நிலம்; அதிலே
விவேகம் மிக்க வீரம் நிறைந்ததும்
கடற் கரையோரச் சோலையாம்; அதிலே
கனகம்போல் மலர் படுக்கை விரித்திட
திடங்தோள் அண்ணல் தேன்மொழியாளைத்
தேடித் தேடி அலுத்தபின் அங்கே
தேடி வந்து ஒண்டொடியாள் தம்
கோடிச்சந்திரக் குளிர் முகந் தன்னை
நில வென்றெண்ணி நிற்கவும், கண்ணுள்
நிமிராத் தலையால் நிலம் பார்த்திடவும்
சிலையோ என்றவன் திகைத்து நிற்கவும்
சித்திரம் வாயால் அத்தான் என்னவும்
நிலை மறந்தன்னுன் நேரிழையாள் முகக்
கலையூர் சேர்ந்து கச்சிதமா யொரு
முத்தம் பறிக்கவும் மூங்கை யராகிச்
சிததம் குளிர்ந்து திருநாள் இதுவென
ஆடியும் ஓடியும் அன்பு விளைத்ததும் —
திரும்பிவரும்போ தொருமுறை தெருவில்
முத்துக் குவியலில் ஒருபடி வாங்கி
மூட்டை கட்டித் தூக்கிச் சென்றதும்
வாங்கு வாரின்றி அரிசியும் பயறும்
மலைமலையாகத் தெருவிற் கிடந்ததும்
யானைக் கூட்டம் தின்றபின் மீதியைத்
தானம் கொடுத்தும் குறையாதாகக்
கப்பலிலேற்றித் தீவிடையுள்ளோர்
களிப்புறத் தந்து கண்ணுற் கண்டதும்
எத்தனை காட்சிகள், இன்ப ஊற்றென!
அத்தனை காட்சியும் அணு அணுவாக
மறைந்திட, பின்னர் வரும் படந்தன்னை
கூறப்புகுமுன் கொதித்திடும் நெஞ்சம்!

(தொடரும்)

பலி பீடத்தில்.....

முன் இதழ் தொடர்ச்சி

தோற்றம் நான்கு.

[ஆப்கானிஸ்தானின் தலைநகரில், முகமது கோரியின் அரண்மனையில், அவனும் குதூப் உதீனும்.]

குதூப் உதீன்: *சலாம், ஷா ஆலம் பனு! புள்ளிமான் கொல்லும் புலியிடம் உதவி கேட்கும் நிகழ்ச்சி. கொத்தும் வல்லூறை வெண்புரு வருந்தியழைக்கும் காட்சி-இனி சரித்திரத்தில் இடம் பெறலாம், ஷா ஆலம்பனு!*

முகமது கோரி: *என்ன விஷயம், குதூப் உதீன்?*

குதூப் உதீன்: *கன்னோசி நாட்டுக் காவலன்—ஜெயச்சந்திரன்—உதவி கேட்டு ஓலை அனுப்பியிருக்கிறார் நமக்கு!*

முகமது கோரி: *உதவி! நம்மிடமா! எதற்காகவாம்?*

குதூப் உதீன்: *உங்கள் பொன்னான கனவு நிறைவேறுவதற்காகவாம்! ஆப்கானிஸ்தானத்தின் பிறைக் கொடி பரத கண்டத்திலே பறப்பதற்காகவாம்! ஷா ஆலம் பனு! பிருத்வியை ஒழித்துக் கட்ட வேண்டுமாம்; அதற்கு நம் உதவி கட்டாயம் தேவையாம்!*

முகமது கோரி: *ஓலை கூறுகிறதோ?*

குதூப் உதீன்: *ஆம்! இரஜபுத்திரப் பரம்பரையின் சாவோலை தான் கூறுகிறது!*

முகமது கோரி: *நல்ல சமயம் குதூப் உதீன்! துரோகிகள் உலவுகிறார்கள் அங்கே! உடனே கிளம்ப வேண்டும் நாம்! மூர்க்கன் பிருத்வியின் முதுகெலும்பை உடைத்து அவன் குடலைப் பிடுங்கிக் கழுகுகளுக்கு இறையாக்கினால் தான் குமுறும் என்னுள்ளம் குளிரடையும்! என்னைத் தோல்வி காணச் செய்தவன்—மண் கவ்வச் செய்கிறேன்! இராஜ புத்திர வம்சமாம், வீரம் பொருந்தியதாம்—குழிதோண்டி புதைக்கிறேன் அந்த வம்சத்தை! நிலை நாட்டுகிறேன் என் பரம்பரைப் புகழை!*

தோற்றம் ஐந்து

[டில்லி கோட்டையிலே பிருத்வி, சம்யுக்தை, மகிபாலன்.]

பிருத்விராஜன்: *இராஜபுத்திர நாரி! எனக்கு விடை கொடுத்தனுப்பு! ஏன் தயக்கம்? யுத்த களத்திலே உன் தந்தையைச் சந்திக்கப் போகிறேனே என்ற கலக்கமா?*

சம்யுக்தை: *தந்தை! அவரா என் தந்தை? காதலில் செழித்துக் கிடக்கும் என் இன்ப வாழ்க்கையை வாட்டி வதைக்க சூளுரைத்து நிற்பவரா என் தந்தை? அழிக்க முடியாத நம் அன்பை ஆழப் புதைப்பதற்காக ஓர் அன்னியனுடன் சேர்ந்து நாட்டைக் காட்டிக் கொடுப்பவரா என் தந்தை? இல்லை, இல்லை! பயம் காட்டும் ஆந்தை! அன்பரே! அவருக்காக நான் கலக்கமடையவில்லை! காதலின் மேன்மையை அறியாத கசடர்களால் நம் இன்ப வாழ்க்கை என்ன ஆகுமோ என்று கலங்குகிறேன்!*

பிருத்விராஜன்: *சம்யுக்தா! உன் பிருத்விராஜனின் வீரத்தின் மீதா உனக்குச் சந்தேகம்? அன்றே அந்த அன்னிய மிருகத்தின் தலையை வெட்டி உன் காலடியில் சேர்த்திருக்க வேண்டும்—தவறிவிட்டேன்! சம்யுக்தா! இப்போது அந்தக் கோரி தப்பமாட்டான்! அவன் மட்டுமல்ல, நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்; அன்னியனோடு குலவி என்னோடு போர் தொடுப்பவர், இனத் துரோகி, உன் தந்தையும் தப்ப மாட்டார்! வீராங்கனையே! உன் தந்தையின் தலை என் வாளுக்கு இறையானால், என்னை இகழாதே!*

சம்யுக்தை: *இகழ்வதா! எதற்காக? உங்கள் வீரவாளுக்கு மாலை சூட்டி பரந்த மார்பில் கவசம் பூட்டிபோர்க் களத்திற்கு வழி காட்டியதற்காகவா? நான் இரஜபுத்திர வம்சத்தில் பிறந்தவள்; யுத்த நெறி அறிந்தவள்....கண்ணாளரே....*

பிருத்விராஜன்: *அதோ. முரசொலி கேட்கிறது! நான் களம் போக வேண்டிய முறை வந்து விட்டது வீர விளக்கே!*

[மகிபாலன் வருகிறான்.]

மகிபாலன்: *மன்னரே! முரசொலி ஒலிக்கிறது! போர்க் கோலம் பூண்டு வந்திருக்கும் அந்த வீணர்கள் பிணக் கோலம் காணப் போவதின் எச்சரிகை கேட்கிறது வேந்தே! சீக்கிரம் கிளம்புங்கள்!*

பிருத்விராஜன்: *இதோ, வந்துவிட்டேன்! சம்யுக்தா, எடு கேடயத்தை....வருகிறேன்!*

சம்யுக்தை: *வாருங்கள் பிரபு! வெற்றி மாலை சூடி வாருங்கள்! வாருங்கள் பிரபு, வாருங்கள்!*

தோற்றம் ஆறு.

[சம்யுக்தையின் அறையில் அவளும் தோழியும்.]

தோழி: *மகாராணி! மகாராணி....!*

சம்யுக்தை: *என்னடி? என்னடி சேதி?*

தோழி: *மகாரணி!*

சம்யுக்தை: *அய்யோ! என்னடி விஷயம்?*

தோழி: *மன்னர் கைது செய்யப்பட்டாரம்மா?*

சம்யுக்தை: *ஆ....! கைது! கைதா செய்யப்பட்டார் என் வெற்றி வேந்தர்? அய்யோ! முடிந்ததா என் இன்பக் காவியம்! அழிந்ததா என் ஆனந்த வாழ்க்கை! கண்ணாளரே! ஏன் கைது செய்யப்பட்டீர்? உங்கள் வீரக்கரங்களுக்கு அடிமை விலங்கா? தீர உடலுக்கு இரும்புச் சங்கிலியா? அதைவிட போரிலேயே மாண்டிருக்கலாமே, மன்னரே!*

தோழி: *மறைந்திருந்து மன்னரைப் பிடித்தார்களாம் மாபாவிகள்!*

சம்யுக்தை: *சூழ்ச்சிக்காரர்கள்! இனி இந்த நாடு வஞ்சகர்களின் வசந்த மண்டபம்! தோழி! போ! போ! உடனே தீ வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்...காதலரே! நம் காதல் கருகி விட்டது; சாதல் நெருங்கி விட்டது...கல்லறையில் சந்திக்கிறேன் கட்டழகரே!*

தோற்றம் ஏழு.

[கன்னோசி நாட்டு நீதி மன்றத்திலே பிருத்விராஜன், முகமது கோரி, ஜெயச்சந்திரன், குதூப் உதீன், காவலர்.]

ஜெயச்சந்திரன்: *முகமது கோரி! இதோ, குற்றக் கூண்டிலே நிற்கும் இந்தக் குறுமதியாளன் என் குலக் கொடியைக் களவாடியவன்! மன்னனும் இவன்—கேடு கெட்ட கயவனும் செய்யத் தகாத காரியத்தைச் செய்திருக்கிறான்! இவனும் ஓர் வேந்தனும்! கூறிக் கொள்கிறான் சிறிதும் வெட்கமில்லாமல்!*

பிருத்விராஜன்: *நீதி மன்றத்தை வசவு மேடையென நினைத்துப் பேசிடும் ஜெயசந்திரரே! மாற்றானின் காலடியில் வீழ்ந்து மார் தட்டிப் பேசும் வீராதி வீரரே! உம் மகளை களவாடினேன்—உண்மைதான்! அவளுக்கு மாலையிட்டு மணாளனானேன்—பொய்யில்லைதான்!, அதற்காக எங்கோ கிடந்த ஓர் வகை கெட்ட அன்னியனுக்கு உம் அவைக் கூடத்தில் இடம் தந்து விட்டு விவேகமில்லாமல் வீண் வார்த்தைகளை வீசிடும் நீரும் ஓர் மன்னர், உமக்கொரு அரியாசனம், வீரர் படை, நீதி மன்றம்—எல்லாம்!*

ஜெயச்சந்திரன்: *வாயை மூடடா நாயே!*

பிருத்விராஜன்: *தனியாக என்னிடம் வாள் வீச முடியாமல், அதோ அமர்ந்திருக்கிறாரே உம் சிம்மாசனத்தின் பக்கத்தில்... அந்த சழக்கரைத் துணைக்கழைத்து இந் நாட்டுப் பெருமையையே இடித்து விட்ட அவமானச் சின்னமே, நீரும் இருக்கிறீரே இன்னும் இராஜபுத்திரனாக—வெட்கம் சிறிதும் இன்றி!*

குதூப் உதீன்: *ஆணையிடுங்கள் அரசே! தலையைத் துண்டித்து விடுகிறேன்!*

பிருத்விராஜன்: *புலிகள்!*

முகமது கோரி: *சிறுவனே! அனலில் அகப்பட்ட சருகடா உன் வீரம்!*

பிருத்விராஜன்: *கரங்களுக்கு விலங்கிட்டு என்னைச் சுற்றிலும் காவல் போட்டு வீரத்தைப்பற்றி விரிவுரையாற்றுகிறது விட்டில் பூச்சி! யுத்த களத்திலே என் பின்புறமாகத் தாக்கியதுதான் உம் வீரத்தின் இலக்கணமா?*

முகமது கோரி: *முட்டாள் தனமாகப் பேசுகிறான்! சிறு பிள்ளைத் தனமாகக் கூவுகிறான்! கேளடா பைத்தியக்காரா! யுத்த களத்தில் பின்புறமாகவும் தாக்குவார்கள்; முன் புறமாகவும் தாக்குவார்கள்!*

பிருத்விராஜன்: *அகம்பாவத்தின் அறிகுறியே! நாக்கிலே துடுக்கும் பார்வையிலே மிடுக்கும் கொண்டவரே! வீரத்தைப் பற்றிப் பேசுகிறீரே, அவிழ்த்துவிடும் என் கையை! கொடுத்துப் பாரும் வாளை! மறைந்திருந்து தாக்கிவிட்டு, அதற்கோர் இலக்கண ஏடு வேறு தீட்டுகிறீர்....பைத்தியக்காரனா நான்? வையகத்திற்கே வாழ வழி காட்டிய தமிழ் மறை பிறந்த நாட்டின் எல்லையோரத்தில் பிறந்த என்னையா பைத்தியாக்காரன் என்கிறீர்? ஆம்! பைத்தியக்காரன் தான்! ஏமாந்த நேரத்தில் ஏற்றங் கொள்ள கணவாய் வழியாக நுழைந்தீரே, அப்போதே உம்மை ஒழிக்காமற் விட்டதால் பைத்தியக் காரன்தான்! கோரியே! குறுமனங் கொண்டவரே! என் இனத்தின் கோபத்திற்கு இலக்காகாதீர்! வேல் முனையின் கூரை அன்னியனின் மண்டை யோட்டிலே தீட்டிப் பார்க்கும் பரம்பரை! இனச் சரித்திரத்தை அறியாதவரே, ஏகாதிபத்தியத்தின் ஏகப் பிரதி நிதியே, திருத்திக் கொள்ளும் உமது போக்கை! போக்கை மல்டுமல்ல—நாக்கையுங் கூட....*

(தொடரும்)

—அண்ணா அன்பன்

வீரனும் நிருபனும்

"நம் எல்லார் தலையிலும்தான் இப்போது குண்டுகள் விழுகின்றன. ஆதலால், வீரனின் போரைவிட, அதிகக் கடினமும் அதிக அபாயமுமான வேலை பத்திரிகைத் தொழிலே. காமிராவையும் நோட்டுப் புத்தகத்தையும் தாங்கிய பத்திரிகை நிருபன், விமானக் குண்டுகளுக்குப் பயந்து, சுரங்கக் குகைகளுக்குள் ஒளிந்துகொள்ளக் கூடாது" என்கிறார் பெர்னார்ட் ஷா, அவர் இப்படி ஒளிந்து கொள்வதே யில்லையாம்.

சுகம் எங்கே?

காளிதாசனின் சகுந்தலை பேரழகி. அந்த அழகுதான் துஷ்யந்தனை காதற் கலை பயிலச் செய்தது. ஆனால் அந்தக் காவியத்தில்—சகுந்தலையின் காதலைக் காட்டிலும், அவள்பட்ட அவஸ்தைதான் காவியத்தை சுவையாக்கிற்று.

* * *

சுகம் பக்கத்திலிருக்கும்போது மனிதனுக்குத் தலைகால் புரிவதில்லை. ஆனால் அது எங்கே என்று தேடவேண்டிய நிர்ப்பந்தம் வரும்போதுதான் சுகத்தின் அருமை தெரிகிறது. சுகத்திலே புரள்பவர்கள் துன்பத்தில் விழும்போதுதான் வாழ்க்கையின் தன்மையே புலனாகிறது.

* * *

கீட்ஸ் பெருங் கலைஞன். அவன் துன்பத்தில்தான் உழன்றான். ஒருத்தியைக் காதலித்தான். அவள்தான் சுகம் என்று கருதினான். ஆனால் அவளும் கிடைக்கவில்லை. 'சுகம் எங்கே' என்று தேடியே செத்துப்போனான். கீட்ஸின் கவிதைகளில் 'வெத்து வேட்டு' இருக்காது; விஷயம் இருக்கும். ஆழம் இருக்கும்; அழகு இருக்கும்; கலை நயம் இருக்கும்.

மகா கவிஞன் கீட்ஸ், மனித சமுதாயத்தில் கவிஞர்கள் என்னும் சாதிக்குத் தலைவன். அவன் 'இரவல்' பெறவும் இல்லை; 'திருட'வும் இல்லை. எழுத்தைத் தூக்கிக் கொண்டு பணத்துக்காக அலைந்ததும் இல்லை.

* * *

இந்தத் தலைப்பில், 'சுகம்' தலைகீழாக நிற்பதில் ஒரு அர்த்தமும் இருக்கிறது…………

ஜான் கீட்ஸ்! மகா கவிஞனாக இருந்தான்—அவன் இறந்த பிறகு இன்றைக்கும் அவன் படைத்துப்போன காவியங்களைப் படித்து இன்புறுகின்றோம் அவைகளைப் படைத்தவனைக் காதலிக்கின்றோம்! இன்றும் அவன் நம்மிடையே புத்துயிருடன் வாழ்கின்றான் — அவன் என்றைக்கும் வாழ்ந்து கொண்டே யிருப்பான்! அவன் இலக்கியத்து அமரன்! உலகம் அறிந்தவன்!

ஜான் கீட்ஸ், இலக்கியத்தில்—காவியத்தில்—சீர்திருத்தக் கருத்துக்களை நுழைப்பதை அறவே வெறுத்தவன்; அழகைக் கண்டு மயங்காதவன் மனிதனல்ல; கீட்ஸ் மட்டும் இந்த நியதிக்கு விதிவிலக்காகவில்லை. மனிதனைப்பற்றி—மனித வாழ்க்கையைப்பற்றி தன் கவிதைகளில் அவன் எழுதவில்லை!

இயற்கையின் முழு எழிலும் அவனை ஆட்கொண்டு விட்டது. அழகைக்காண வேண்டும், அதை மோகிக்க வேண்டும், அதை அழகாக வருணித்து எழில் நிறைந்த கவிதை மலர்களாக மிளிரச் செய்யவேண்டும்—இதுவே அவனின் உள்ளத்துடிப்பு — ஆத்ம இலட்சியம்! 'அழகு' தான் 'உண்மை;' உண்மை'தான் 'அழகு' என்றான் ஜான் கீட்ஸ்! மனித வாழ்க்கையிலிருக்கும் அல்லல்களை, இன்னல்களை நீக்க உதவும் உண்மை வழிகளை நாடினான் — அவைகளை அழகில் ண்டான்!

கீட்ஸின் தந்தையான தாமஸ் கீட்ஸ், குதிரைலாயம் ஒன்றை நடத்தி வந்தவரிடம் வேலைக்கமர்ந்து அவரின் மகளையே மணந்தான். இந்தத் தம்பதிகளுக்கு மூன்று ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. ஆண் குழந்தைகளில் மூத்தவனாக, குறைபிரசவ (ஏழு மாத) குழந்தையாகப் பிறந்தான் 1795-ம் வருடம் லண்டன் பட்டினத்தின் ஒரு பகுதியில்.

இளமையில் கீட்ஸ் அழகின் பிறப்பிடமாகக் காட்சியளித்தான். "இவன் கண்கள் சாராயத்தின் பளபளப்பு போன்றவை" என்று அவன் நண்பனொருவன் கூறுகிறான். இவனின் அழகு, வயது வளர வளர மென்மேலும் பிரகாசத்துடன் பெருகியது. ஜான் கிளார்க் என்பவர் நடத்தி வந்த பள்ளியில் கல்வி பயின்றான் ஜான் கீட்ஸ். தனது பள்ளிச் சிறுவர்களிடம் சண்டைபோட்டு அவர்களை உதைப்பதில் பிரயாசை கொண்டவனாயிருந்தான்.

ஜான் கீட்ஸ் தனது தாயை வெகு அன்புடன் நேசித்து வந்தான். அவளும் மற்ற பிள்ளைகளைவிட இவனிடத்தில் தான் அதிக அன்பு காட்டி வந்தாள். இவன் சிறுவனாயிருக்கையில், தன் தாய் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் படுத்திருக்கையில், பழைய கத்தி ஒன்றுடன் அவள் படுத்திருந்த அறைக்கு வெளியில் நின்று கொண்டு யாரையும் உள்ளே போக அனுமதிக்க மறுத்து விட்டான். அவனின் தாயே வெளியில் போக முயன்றபொழுது அவளையும் வெளியில் போகக் கூடாதென கூறினாளும் கடைசியில் அவள் கூச்சலிட்டு சுற்றத்தாரின் உதவி கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாளாம்.

பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் 1811-ம் ஆண்டு டாக்டர் ஹமாண்ட் என்பவரிடம் வைத்தியத் தொழில் கற்றுக் கொள்ளும் மாணவனாக அமர்ந்தான். டாக்டரின் வைத்திய சாலையை கவனித்துக் கொள்ள வேண்டும், மருந்துகள் கலந்து தர வேண்டும்; மருந்துச் சீசாக்களுக்கு 'லேபிள்' ஒட்டவேண்டும், டாக்டருடன் சென்று, அவர் நோயாளியின் வீட்டிற்குள் போயிருக்கும்பொழுது, வீதியில் நின்று கொண்டு குதிரையைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். இப்படி இருந்தும் வைத்தியத் தொழிலில் வெகு விரைவில் தேர்ச்சி பெற்றான் கீட்ஸ்! இந்தக் காலத்தில்தான் அவன் தன் வாழ்க்கையில் அமைதியைக் கண்டான் என்று சொல்லப்படுகிறது.

இவனுக்கு கவி எழுதும் திறமை நிறைய புத்தகங்களைப் படித்த பிறகுதான் உண்டாயிற்று. கௌடன் கிளார்க் என்ற நண்பன் கீட்ஸுக்கு நிறைய புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் செய்தான். அவைகளில் ஸ்பென்ஸர் எழுதிய 'பேய்ரிக்வீன்' என்ற கவிதையும், சாப்மனின் ஆங்கில மொழிபெயர்ப்பான ஹோமரின் (Homer) கவிதைகளும், ஷேக்ஸ்பியர், மில்டன் ஆகியோரின் நாடக இலக்கியங்களும் இவனுக்கு நிரம்ப பிடித்திருந்தன. தனது பதினெட்டாம் வயதில் கவிதைகள் இயற்ற ஆரம்பித்தான் கீட்ஸ். இவனுக்கு இசைக் கலையிலும், சிற்பக் கலையிலும் பெருத்த ஆர்வம் இருந்தது. 'கவி எழுதும் ஆற்றல் ஒருவனுக்கு வருவது, மரங்களுக்கு இலைகள் வருவதுபோல, இயற்கையாக வர வேண்டும்' என்று கூறியவன் ஜான் கீட்ஸ்!

லேஹண்ட் (Leigh Hunt) என்ற கவிஞன் அக்கால அரசியல் போராட்டங்களில் பெருத்த பங்கு கொண்டு பணியாற்றி வந்தவன். இவனின் நட்பு கீட்ஸின் கவிதை சமைக்கும் திறமைக்கு பேருதவியாயிருந்தது. இந்த நட்பு கீட்ஸுக்கு கௌடன் கிளார்க் மூலம் கிடைத்தது.

லேஹண்ட் அன்று அரசியல் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைப்படுத்தப்பட்டு அன்று விடுதலை அடைந்திருந்தான். அவனின் தியாகப் பண்பைப் பற்றியும், விடுதலையைப் பற்றியும் புகழ்ந்து ஒரு கவிதை எழுதி நண்பன் கிளார்க்கிடம் கொடுத்து அதை லே ஹண்டிடம் கொடுக்குமாறு சொன்னான். அதன் மூலம் கீட்ஸுக்கும், லே ஹண்டுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது ஹண்ட் நல்ல படிப்பாளி. அழகு எங்கிருந்தாலும் அதைப் போற்றிப் புகழ வேண்டும் என்ற பண்புடையவன். இவ்விருவரும் எந்நேரமும் கற்பனைப் பொழிலில் புகுந்து அங்கு காணும் அழகுகளில் சொக்கிப் போய்க் கிடப்பார்கள்.

லே ஹண்டின் நட்பு கிடைத்ததிலிருந்து நிறைய கவிதைகள் எழுத ஆரம்பித்தான் கீட்ஸ். கிரேக்க இலக்கியத்தை நன்றாகப் படித்தான். பட்டினத்து வாழ்க்கையை வெறுத்து, கிராமியப் புறங்களில் இயற்கைத்தேவி தீட்டும் எழிலோவியங்களை, வண்ணக் காட்சிகளை இருபத்தி நான்கு மணி நேரமும் கண்டு களிக்க வேண்டுமென்று விரும்பினான்!

வாழ்க்கையை — மலராத ரோஜா மொட்டுக்கும், சம்பவங்கள் நிறைந்த கதைக்கும், மெல்லிய முகத்திரை அணிந்துள்ள கன்னியின் முகத்திரையை விலக்குவதற்கும், கோடைக் காலத்தில் வானத்தின் துரிய வெளியில் பறக்கும் பட்சிக்கும், கவலையற்று விளையாடிக் கொண்டிருக்கும் பள்ளி மாணவனுக்கும் ஒப்பிட்டுப் பார்த்தவன் கீட்ஸ்!

கீட்ஸ் படைத்த இலக்கியங்களையெல்லாம் ஆராய்ந்து பார்க்க இங்கு இடமில்லை. அவன் கவிதைகளில் அழகுக் குமரியின் அற்புத வர்ணனைகளும், இனிமையான ஆங்கில வார்த்தைகளும் அளவுக்கு மீறி பொதிந்து கிடக்கின்றன.

உள்ளத்தை உலுக்கி உணர்ச்சியை சுமந்து வரும் வார்த்தைகளை, அழகான உவமைகளுடன் அள்ளித்தெளிப்பது அவனின் இயல்பான திறமையாயிருந்தது. அவனின் கவிதைகள் அவனின் வாழ்க்கையைப் போல ஒரு மர்மக்குகை!

இவன் வாழ்ந்த காலத்தில் புகழ் இவனை அணுக மறுத்து விட்டது. இவன் எழுதிய கவிதைகளை புத்தகரூபத்தில் வெளியிட்ட பதிப்பகங்களுக்கு பெருத்த பண நஷ்டம் உண்டாயிற்று. சில பிரசுரகர்த்தர்கள் மனம் சலிக்காமல் இவனின் எழுத்துக்களை வெளியிட்டனர், ஆனால் தோல்வியிலும் எழுச்சி கொண்டு எழுதினான் கீட்ஸ்! அவனின் வாழ்க்கையே ஒரு வறுமைக் காவியம். அது மட்டுமல்ல, தீராத காச நோயும் நாளுக்குநாள் அவனை தீய்த்துக் கொண்டே வந்தது. ஜான் கீட்ஸ் 1815-ம் வருடம், 'ஏ! தனிமையே' என்ற தனது முதல் கவிதையையும், 1820-ம் வருடம் 'காதலனின் குற்றச் சாட்டு' என்ற தனது கடைசிக் கவிதையையும் எழுதினான்.

இவன் எழுதிய நீண்ட கவிதைகளுள் சிகரமாக விளங்குவது 'எண்டிமியான்' (Endymian) என்ற கவிதையாகும். இது தன்னை இயற்றியவன் வாழ்ந்த காலத்தில் அவனுக்குப் புகழைத் தேடித்தர முடியாமல் போயிற்று. ஆனால் அவன் இறந்த பிறகு, இந்தக் கவிதைதான் ஆங்கில இலக்கிய அன்னைக்கு வைரமணி மகுடமாய் நின்று அணையா ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

காதல் அவன் வாழ்க்கையில் மிக முக்கியமான அம்சம்! ஃபானி பிரான் (Fawny Brawne) என்ற பேரழகியை அவன் காதலித்தான், அவள் அவன் வாழ்க்கைக் குகையினுள் நுழைந்தாள்—அவனை சந்தித்த ஒரு வாரத்திற்குள் அவன் இதயத்தில் அவள் காதல் ஜோதியாகத் துலங்கி

கொண்டிருந்தாள். கவிதையும், காதலும் தான் இவன் வாழ்க்கையில் முக்கிய இலட்சியங்களாக விளங்கின. இவைகளுக்காக இதர இவ்வுலக விஷயங்களை விலக்கி, இவையிரண்டையுமே தன் வாழ்வின் இறுதிமுனை வரை கடைப்பிடிப்பதாக மன உறுதி கொண்டான் — அப்படியே தன் வாழ்க்கையில் செய்தான்—மடிந்தான்.

அவளைச் சந்தித்த பிறகுதான் தன் வாழ்க்கையில் அமரப்புகழ் தேடித்தந்த அருங்காவியங்களை உருவாக்கினான். இவளை எப்படியாவது மணம் செய்து தன் வாழ்க்கையை மணக்கச் செய்ய வேண்டுமென துடியாய் துடித்தான். ஆனால் அந்த எழில் வல்லி எட்டாக்கனியாகவே எட்டி நின்றாள் — வானக் கொம்பிலுள்ள வண்ணக் கனி போல! அவளைப்பற்றி தனது வாழ் நாள் முழுமையிலும் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கி வாழ்ந்தான்!

'இவள் தான் அவனைக் கொன்றாள்' என்று கூறும் சில இலக்கிய வல்லுனர்களும் உண்டு. இந்தக் கூற்றுக்கு ஆதாரமில்லை. கீட்ஸின் காதல் வெற்றியடைந்திருந்தாலும், அவளுடன் அவனால் தாம்பத்ய வாழ்க்கையை நடத்தியிருக்க முடியாது. காச நோய் அவன் புப்புசங்களை அரித்து விட்டிருந்தது கரையான் போல! அவள் அவனின் வாழ்க்கையில் வேதனையை மட்டும் புகுத்தவில்லை; அவனின் இன்றைய அணையாப் புகழுக்கு மூலகாரணமே அவள் தான்!

ஃபானி பிரான் கட்டழகி; நாட்டியக் கலையில் கை தேர்ந்தவள். கீட்ஸ் அவளைக் காதலித்தானே தவிர அவள் அவனை சம உணர்ச்சியுடன் காதலிக்கவில்லை. அவள் அளவுக்கு மீறிய ஆடம்பரக்காரி. நாட்டியம், விருந்து, கேளிக்கை இவைகளை விரும்பினாள். ராணுவஸ்தர்களின் உணவு விடுதிகளில் அவர்களுடன் நாட்டிய மாடுவதையே மிகவும் இச்சித்தாள்! அவள் பல வண்டுகளை இச்சிக்கும் வாசமலர் — பல வாலிபர்களுக்கும் தனது 'அன்பை'ப் பகிர்ந்துகொடுத்தாள் — அவர்களில் கீட்ஸ் ஒருவன்! அவ்வளவுதான்!

இவன் இவளுக்கு எழுதிய காதல் கடிதங்கள் உலகப் புகழ் பெற்றவை—காதல் தேன் சொட்டும் தேனடைகள் அவை! "பெண்ணே! எந்தப் பொருள் மீதும் என் மனம் படிந்து தூய இன்பம் பெற்றதில்லை. ஆனால் உன் மீது மட்டும் என் மனம் நிரந்தரமாகப் படிந்து பேரானந்தம் துய்க்க துடிக்கிறது! என்று ஒரு காதல் கடிதத்தில் எழுதினான்.

மற்றொரு கடிதத்தில் :—

"கண்ணே! மதத்தின் மாண்பைக் காக்க மதப் பெரியோர்கள் தம் வாழ்க்கைகளை தியாகம் செய்திருக்கிறார்கள். இது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. இதை வெறுத்து மிருக்கிறேன். ஆனால் உன்னைக் கண்டதிலிருந்து அத்தகைய தியாகத்தைச் செய்ய நான் விரும்புகிறேன். ஏன்? காதல் என் மதம்; இதற்காக இறப்பேன்! என் மதக் கோட்பாடு காதல்! அதன் ஒரே தத்துவம் நீ! உன்னை அடைய மரணத்தையும் தழுவுவேன்!" என்றும் "ஃபானிபிரான்! இந்த உலகத்தில் இரண்டே இன்பங்களைப் பற்றி நான் சிந்திக்கிறேன். அவை உன் காதலும், என் மரணமும்தான்! இந்த உலகத்தில் இரண்டும் ஒரே சமயத்தில் எனக்குக் கிடைத்து விட்டால் எனக்கு ஈடற்ற பேரானந்தம் தான்!" என்றும், அவனின் காதல் கடிதங்கள் இன்ப ஒலமிடுகின்றன.

இயற்கை யழகுகளைக் காண கண்டு மகிழ—தன் நண்பனுடன் ஸ்காட்லண்டு மலைப் பிராந்தியங்களில் சுற்றிக் கொண்டிருக்கும் சமயம் அந்த தேசத்தின் குளிர் காற்று அவன் காச நோயை பன் மடங்கு வளர்த்துவிட்டது! சில சமயங்களில் இரத்தம் இரத்தமாகக் கக்குவான்.

"நண்பா! என் உள்ளத்தில் எரியும் நிலக்கரித் துண்டுகள் உள்ளன. அவை எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கின்றன. மனித மனம் இவ்வளவு இன்னல்களை பொறுமையுடன் பொறுத்திருப்பது எனக்கு பெருத்த ஆச்சர்யத்தை தருகின்றது. இந்த வேதனை செறிந்த வாழ்க்கையை அனுபவிக்கத்தானா நான் பிறந்தேன்?" என்று தனது நண்பனொருவனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றான்.

அவன் வாழ்க்கையின் அந்திம காலம் கொடுமையும், வேதனையும் நிரம்பியது. கடும் சுரம் கண்டு படுக்கையோடு படுக்கையாகப் படுததுக் கிடந்தான் கீட்ஸ் அப்பொழுது கூட தன் காதலிக்கு கடிதங்கள் எழுதாமலில்லை.

தினமும் அவள் கைப்பட 'சுக இரவு' (Good Night) என்ற இரு வார்த்தைகளை எழுதி எனக்கு அனுப்பிக் கொண்டிருந்தால், அந்தத் துண்டு காகிதத்தை என் தலையணைக்குக் கீழ் வைத்துக்கொண்டு ஒவ்வொரு இரவும், நிம்மதியாக தூங்கி எழுவேன் என்று தனது தோழனொருவனிடம்பொருமிப் புலம்பினான் ஜான் கீட்ஸ்!

அவன் வாழ்க்கையில் இந்தக் காதல் போராட்டம் இல்லாமலிருந்திருந்தால் அவன் படைத்த இலக்கியங்களுக்கு இன்று வெற்றி கிடைத்திருக்காது. மனிதனை கீட்ஸுக்கு அவனின் காதலி துன்பச்சுமையாயிருந்தாலும், கவிஞனை கீட்ஸுக்கு அவள் நிரந்தர இன்பம் கொடுத்தவள்!

"வாழ்க்கை என்பது வேதனை நிறைந்த பள்ளத்தாக்கு அல்ல; அது ஆத்மா வளரும் இடம்" என்றும் "மனித ஆத்மா இன்னல்களுக்கு இடையில் தான் வளர வேண்டும்" என்றும் தன் கவிதையொன்றில் குறிப்பிட்டிருக்கிறான். "மணம் மல்கும் மலர்ப் பொழிலில் இதழ் விரித்து மலரும் ரோஜா, தன்னை குளிர் வாடைக் காற்றிலிருந்தும், கதிரவனின் அனல் கிரணங்களிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ள முடியாது. மனித வாழ்க்கையும் இப்படித்தான்" என்பது கீட்ஸின் சித்தாந்தம்.

லண்டனிலிருந்தால், தனக்கிருக்கும் காச நோய் குணமாகா என்று தன் நண்பன் செவர்னுடன் இத்தாலிக்குப் புறப்பட்டான். ஆனால்! ரோமாபுரி பட்டினத்தில் 1821-ம் வருடம் பிப்ரவரி மாதம் 28-ம் தேதியன்று விடிவெள்ளி முளைக்கும் நேரத்தில் அமைதியுடன் இறந்தான் மகா கவி கீட்ஸ்!

உயிர் விடும்போது தன் அருகில் இருந்த நண்பன் செவர்னிடம் "நண்பா நான் இறந்து விடுவேன். பயந்து விடாதே! இதற்காகத்தான் இவ்வளவு காலம் காத்துக் கிடந்தேன். அது வந்து விட்டது அதை அனுப்பியவனை புகழ்ந்து பாடு" என்றான். *

—கோமேதகவேலு

ஆசிரியர் - கட்டுரையாளர் தகராறு!

சிகாகோ நகரில் ஒரு கட்டுரையாளர் ஏழு வருஷங்களுக்கு முன்னே ஒரு பத்திரிகைக்கு ஏதோ ஓர் வியாசம் எழுதி அனுப்பினார். "கட்டுரை வந்தது. பிரசுரித்ததும் சன்மானம் அனுப்புகிறோம்" என்று பத்திரிகைக்காரரிடமிருந்து அவருக்குப் பதில் கிடைத்தது. ஆனால், இதுவரையில் சன்மானத்தைக் காணோம்; வேறு தகவலும் எதுவுமில்லை. "என் கட்டுரை என்ன ஆயிற்று?" என்று ஏழு வருஷத்துக்குப்பின், இப்போது அந்தக் கட்டுரையாளர் எழுதிக் கேட்டார், நிர்வாகிகள் ஆசிரியரைப் போய் விசாரித்தார்கள். "என்ன அவசரப்படுகிறார் அந்த நண்பர்! கொஞ்சம் பொறுத்திருக்கச் சொல்லுங்கள்" என்று கம்பீரமாக ஆசிரியர் அதட்டி விட்டாராம்.

இதே மாதிரி மற்றோர் கதையுண்டு. மத சம்பந்தமானதோர் பத்திரிகைக்கு, ஒரு பாதிரியார் என்னவோ கட்டுரை எழுதியனுப்பினார். அது ஆசிரியரின் 'புறாக் கூட்டு'க்குள் போய்விட்டது. பல வருஷங்களுக்குப் பின் அவர் கண்ணில் அது மீண்டும் தட்டுப்பட்டிருக்கிறது. படித்துப் பார்த்தபோது, அது அவருக்கு ரொம்பப் பிடித்தமாயிருந்தது. பாதிரிக்கு ஒரு கடிதம் எழுதினார். "உங்கள் கட்டுரை ரொம்ப அருமையா யிருக்கிறது. காலத்துக்கேற்ற நேர்த்தியான கருத்துக்கள்" என்று அதில் ஆசிரியர் குறிப்பிட்டார். பாதிரியாரின் பதில் இது; "என் கட்டுரையை இப்போதாவது பிரசுரிக்கப் போகிறீர்களே; ரொம்ப சந்தோஷம். ஆனால், அதில் ஒரு சிறு திருத்தம் செய்து வெளியிடுங்கள். 'இரண்டு குழந்தைகளின் தகப்பனான நான்' என்று அதில் ஓரிடத்தில் என்னைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அதைத் தயவு செய்து 'எட்டுக் குழந்தைகளின் தகப்பனான நான்' என்று திருத்திவிடுங்கள்."

இதர வேலைகளுக்கு நடுவே பல கட்டுரைகளும் வந்து குவியும்போது, பல சரக்குக் கடைக்காரனுக்குப் பைத்தியம் பிடித்ததுபோல் ஆகிவிடுகிறது பத்திரிகை ஆசிரியர்களின் நிலைமை. அதுவே இம்மாதிரி சம்பவங்களின் காரணமாகும்.

மாதவிடாய் நின்றுபோனதா?
நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/686
சாதாரண தேவைகளுக்கு (Ordinary) ... விசேஷ தேவைகளுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)
கர்ப்பதடை
நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266.
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். ... பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)
SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
134. SERANGOON ROAD, ...
NEW COLOMBO MEDICAL STORES. 62 Main St. ...

அபாரமான கற்பு!

1944-ம் ஆண்டு; அப்போது எனக்கு வயது பதினேழு. மதுரைக்குப் பக்கத்தில் உள்ள சின்னமனூரில் தமிழ்த் தொண்டர் மாநாடு நடைபெறுகிறது. நாவலர் பாரதியார்; அ. மு. சரவண முதலியார், மு. ராசாக்கண்ணனார், ஞா. தேவநேயப் பாவாணர், நாரண துரைக்கண்ணன், நான் ஆகியோர் அந்த மாநாட்டில் பங்கு பெற்றிருந்தோம். காலை மாநாட்டில் நான் பேசினேன், சுத்தானந்த பாரதியாரின் நூல் ஒன்றைக் கண்டித்துப் பேசியதாக ஞாபகம். நாவலர் பாரதியாருக்கு மிகுந்த சந்தோஷம். (அப்போது நான் 'திருமகள்' என்னும் இதழில் ஆசிரியராக இருந்தேன்.)

இடை வேளைக்கு மாநாடு கலைந்தபோது, எல்லோரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். பேச்சு வாக்கில், திரௌபதிக்கு ஒரு ஊரில் கோயில் கட்டியிருப்பது பற்றிப் பேச்சு வந்தது. நாவலர் அது பற்றிக் காரசாரமாகப் பேச ஆரம்பித்தார். திடீரென்று 'சைவப் பெரியார்' சரவணர் குறுக்கிட்டார். "மறுப்போ" என்று அஞ்சினேன் நான். ஆனால் அவர் சொன்னது இது:

"திரௌபதியைப் பற்றி நமக்குத் தெரிந்ததெல்லாம், அவள் ஐவருக்கும் பத்தினியானாள்; ஆறாவதாக கர்ணனையும் காதலித்தாள் என்பதுதானே? இன்னும் ஒன்று புராணத்தில் இருக்கிறது. அதாவது, "ஆடவரைக் கண்டக்கால் அல்குல் புளகிக்க……" என்பதாக. ஆண்களைக் கண்டாலே போதுமாம்; அவளது உள்ளமும் உணர்ச்சியும் துடிக்குமாம்" என்று முடித்தார்! உடனே பாரதியார், "ஆகா! இவளன்றோ பத்தினி!" என்று தனக்கே உரித்தான பாணியில் சொன்னதும் அங்கிருந்தோரிடையே சிரிப்பொலியும் கைதட்டலும் மேலோங்கின.

* * *

பிறகு, டி. கே. சிதம்பர நாதர் அப்பொழுது ஆரம்பித்திருந்த "சொற்புணர்ச்சி எதிர்ப்பு" பற்றிப் பேச்சு வந்தது. வேல்+கண்ணி=வேற்கண்ணி; பால்+சோறு=பாற்சோறு; வாள்+தடங்கண்=வாட்டங்கண் என்றெல்லாம் எழுதுவது தவறென்றும், சொற்புணர்ச்சி கூடாதென்றும், வேல்க்கண்ணி, பால்ச்சோறு, வாள்த்தடங்கண் என்றே கூறவும் எழுதவும் வேண்டுமென்றும் சிதம்பரநாதர் கூறி வந்தார். இதற்கு அங்கே காரமான மறுப்புக் கிளம்பிற்று. நாவலர் பாரதியாரிடம், நான், "இந்தக் கருத்தை வேறொரு புலவர் ஆதரித்திருக்கிறாரே பார்த்தீர்களா?" என்றேன்,

"இவர் சொல்லை அவர் ஆதரிக்கிறாரோ?" என்று நாவலர் கேட்டுவிட்டு,

"கல்த்தாரைக் கல்த்தாரே காமுறுவர்!" என்று முடித்தார்.

—கண்ணதாசன்

உலகத்தில் பலமாதிரி பைத்தியங்கள். சில "ஆர்டினரி" சில "எக்ஸ்பிரஸ்". எக்ஸ்பிரஸ் பைத்தியங்களைச் சமாளித்துக் கொள்ளலாம்; ஆர்டினரி பைத்தியங்கள்தான் சகிக்க முடியாததாகின்றன. இந்த 'ஆர்டினரி' பைத்தியங்கள் எப்போது என்ன செய்யும் என்று சொல்ல முடியாது. திடீரென்று எதையாவது செய்து வைக்கும். தன் தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளும். குதிக்கும்; ஆடும்; பாடும்—இதைப் பார்க்கக் கூட்டம் சேர்ந்துவிடும். உடனே பைத்தியம் நினைத்துக் கொள்ளும், குதிப்பில் தாளம் இருப்பதாகவும், தன் ஆட்டம் பரதநாட்டிய முறையில் கச்சிதமாக அமைந்திருப்பதாகவும், தன் பாட்டு ஸ்வர சுத்தமாக இருப்பதாகவும்! உடனே எல்லாம் அதிகமாகும்!

* * *

சமீபத்தில் ஒருவர் கச்சை கட்டிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தபோது, எனக்கு மேற்கண்ட நினைவுதான் வந்தது! எதிரே இருப்பது மலை—அந்த நபர் தலையைக் கொண்டு முட்டி அதைச் சாய்த்து விடுவதாகக் கர்ஜிக்கிறார்; ஓலமிடுகிறார்; ஒப்பாரி வைக்கிறார்! "கொஞ்சம் பொறும்" என்றாலும் கேட்க மாட்டேன் என்கிறார். "ஆச்சா போச்சா! ஐயா மனது வைத்தால் அத்தனையும் தூள் தூள்!" என்கிறார். உடனே பக்கத்திலிருப்பவர்கள், "அடாடா! உங்கள் வீரமே வீரம்; அர்ச்சுனன் உங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் குடியிருந்திருக்கிறான்!" என்கின்றனர். ஆட்டம் போடுகிறவரைக் காட்டிலும் அவரைத் தட்டிக் கொடுப்பவர்கள்தான் 'கொல்'லுகிறார்கள்! உலகத்திலே இதுமாதிரி பக்கவாத்தியங்கள் பல உண்டு.

"நீங்கள் பேசினீர்களே பேச்சு அது சிலம்பு பாடிய இளங்கோ வடிகளுக்கே ஒரு பாடமாக வைக்கப்பட வேண்டியது! அந்த ஒரு இடத்தில் உங்கள் வர்ணனை பிச்சு வாங்கி விட்டது. 'சவால்' விட்டீர்களே, அதுதான் அற்புதம்!" என்று இவ்வாறாக 'தூக்கி விட்டு' 'தொப்'பென்று போட்டு விடுவார்கள், இவர்கள்.

* * *

"திருடர்களுக்கு நீங்கள் கொடுத்த சூடுதான் சரியான சூடு!" என்றுகூடச் சொல்லினவாம், மேற்படி நண்பரின் பக்கவாத்தியங்கள். உடனே அந்த நண்பர் தலையை குனிந்து கொண்டாராம். எனன சொன்னாலும் மக்கள் நம்புவார்கள் என்கிற மனப்பண்பு இருக்கிறதே, அதுதான் கொஞ்சம் புத்தி உள்ளவர்களைக் கூட பித்தர்கள் ஆக்கிவிடுகிறது. "நாம்தான் உலக மகா புலவன்" என்கிற எண்ணம் தான் பித்துக்கு மற்றொரு காரணம்.

* * *

"இவ்வளவும் எதைப்பற்றியப்பா சொல்கிறாய்?" என்று 'புரியாதவர்கள்' கேட்பார்கள். சமீபத்தில் ஒரு ஹாலுக்குள் பேசிய தோழர் விநாயகம் எம். எல். ஏ., தி. மு. கவைப் பற்றி வெளுத்து வாங்கினாராம்; "நான் மனது வைத்தால் பொதட்டூர் பேட்டை மாநாடு நடைபெறாமலே செய்திருப்பேன்!" என்றாராம். உடனே சின்னதுகள், தபேலா, ஆர்மோனியம், 'புளூட்' எல்லாம் வாசித்ததுகளாம்! தி. மு. கழகம் 'திருடர்கள் கழகம்' என்றாராம், திருட்டு ஓட்டு வாங்கிய கூட்டத்தில் குடியேறியிருப்பவர். என்ன இருந்தாலும் நண்பர் விநாயகம் இப்படி திடீரென்று 'பயில்வானா'கக் கூடாது. அரசியல் கண்ணியம் ஒரு துளியாவது இருக்கவேண்டுமல்லவா!

* * *

"அரசியலில் இருப்பவர்களுக்கு அதுதான் சொந்தம்; மற்றதெல்லாம் அடுத்த பட்சம்தான். மற்ற விஷயங்களில் காட்டுகிற அக்கரை ஒரு அளவுக்குத்தான் இருக்க வேண்டும்—பேசுகிற பேச்சிலும் எழுதுகிற எழுத்திலும் ரொம்ப நிதானம் வேண்டும்"—இது தோழர் விநாயகத்துக்கு நினைவிருக்க வேண்டும்.

* * *

தோழர் விநாயகம் ஒருமுறை மீர்சாகிப் பேட்டை வள்ளுவர் விழாவில் பேசும்போது "திருக்குறள் மூன்று அடிகளாக எழுதப்பட்டிருக்கிறது!" என்று பேசினார். அந்தக் கூட்டத்தில் நமது தோழர்களும் பேசினர். "இல்லை ஐயா! இரண்டு அடிதான்!" என்று எடுத்துச்சொல்ல வேண்டியதாகி விட்டது.

* * *

இதுமாதிரி படிக்காமலேயே பேசிவிடுவார், நண்பர்! இப்போது சிந்திக்காமலேயே பேசிவிட்டார், நண்பருக்கு நமது அனுதாபம். அரசியலில் இருப்பவர்கள் அவசரப்பட்டு, தன் கண்ணியத்தை முழுதும் அழித்துவிடும் வார்த்தைகளைக் கொட்டினால், புகழ் வந்த வேகத்திலேயே போய், 'தொப்'பென்று விழ வேண்டியிருக்கும்.

* * *

இன்னும் நண்பர் சிந்திக்காமலேயே பேசினால், 'நாங்கள் செத்துவிடவில்லை' என்பதையும் நாம் நினைவுபடுத்தியாக வேண்டும். "அவருக்கு நம்மைப் பற்றி எவ்வளவு தெரியுமோ, அதைக்காட்டிலும் அதிகமாகவே நமக்கு அவரைப்பற்றி தெரியும்."

—வணங்காமுடி.

அம்மையே அப்பன்!

டெக்ஸாஸ் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் லேடி ஆஸ்தர் என்றொரு அம்மையார் இருக்கிறார். அவருக்கு இருபது வயது நிரம்பப் பெற்ற ஒரு பையன் இருக்கிறான். அந்த அம்மையாருக்கு சமீபத்தில் உடலில் ஒரு விதமான வலியும், வேறு வகையான உணர்ச்சிகளும் தோன்ற ஆரம்பித்ததாம். இளம் பெண்களிடத்திலே தாய் போலவும் சகோதரி போலவும் பழகி வந்த அந்த அம்மையார், அவர்களிடம் காதல் லீலைகள் புரிய ஆரம்பித்தாராம். கடைசியில் அவர் மகன், அவரை டாக்டரிடம் அழைத்துக் கொண்டுபோய், என்ன விஷயம் என்று கேட்க, டாக்டர் அவரைச் சோதித்துவிட்டு ஒரு 'மைனர் ஆபரேஷன்' செய்தாராம், அந்த அம்மையார் ஆணாக மாறிவிட்டாராம். ஆமாம்; அம்மை, அப்பன் ஆகிவிட்டாராம்!

— ரிக்வின்

Printed at Ponni Achakam, Madras-1. Editor & Publisher KANNADHASAN 2, Shanmuga Mudali Street, Madras-14